இதழ் 365
15 நவம்பர் 2025
18 பக்கங்கள்

இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

youtube. com/@IlakkuWeb2. 0
facebook. com/ilakku. ilakku. 10
twitter. com/Ilakku1



## மாவீரர் மாதம்:
உயிரை விட உயர்ந்தது மக்கள் சுதந்திரம் என்று நம்பி நிலை நிறுத்தியவர்கள் மாவீரர்கள்.

# அநுரவின் பட்ஜட்டுக்கு தமிழரசு நடுநிலை ஏன்? எதற்காக? எப்படி?

விதுரன்

# தொல்பொருள் ஆலோசனைக் குழுவா? சிங்கள பௌத்த ஆலோசனைக் குழுவா?

பா. அரியநேத்திரன்

வேல்ஸில் இருந்து அருஸ்



# படைவலுச் சமநிலை மாற்றத்தை உறுதிப்படுத்திய செங்கோட்டைத் தாக்குதல்


© 2025 இலக்கு இணையம்

# மாவீரர் இல்லங்களை தமிழர் -களிடம் ஒப்படையுங்கள்

## கோடீஸ்வரன் கோரிக்கை



வடக்கு கிழக்கிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை அங்கீகரித்து, அங்கிருந்து இராணுவத்தை வெளியேற்றி அவற்றை தமிழ் மக்களிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம், இலங்கை தமிழரசுக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு- செலவுத் திட்டத்தின் 2ஆம் வாசிப்புமீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் க. கோடீஸ்வரன் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

“ ஜே.வி.பியின் வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் கார்த்திகை வீரர்கள் தினம் நவம்பர் 13 ஆம் திகதி நினைவு கூறப்படுகின்றது. இடதுசாரி கொள்கையுடன் போராடிய வீரன் என்ற அடிப்படையில் நானும் அஞ்சலி செலுத்துகின்றேன்.

வடக்கு, கிழக்கில் 32 இற்கு மேற்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்கள் உள்ளன. எங்களது இனத்துக்காக, விடுதலைக்காக போராடிய மாவீரர்கள் விதைக்கப்பட்டுள்ள அந்த புனிதமான – கண்ணியமான இடங்களை பாதுகாக்க வேண்டும்.

மாவீரர் துயிலும் இல்லங்களை வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களிடம் பொறுப்பு கொடுக்க வேண்டும். அந்த இடங்களில் இருந்து இராணுவத்தை அகற்ற வேண்டும். மக்கள் சுதந்திரமாக நினைவு கூர்வதற்கு இடமளிக்க வேண்டும். நீங்கள் நிதி ஒதுக்க தேவையில்லை. நாங்கள் தமிழர்கள் நிதி ஒதுக்கி, புனிதமான இடங்களை பாதுகாப்போம்.” என கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்கும் வரைபை பகிரங்கப்படுத்துமாறு வலியுறுத்தல்!

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவதற்கான சட்ட மூலத்தை வரைவதற்காக நியமிக்கப்பட்ட குழுவானது, நீதி அமைச்சரிடம் கையளித்துள்ள அறிக்கையையும் வரைவு சட்ட மூலத்தையும் பகிரங்கப்படுத்துமாறு அரசாங்கத்தையும் குறிப்பாக நீதி அமைச்சரையும் கேட்டுக் கொள்கிறோம் என சர்வ ஜன நீதி அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

சர்வஜன நீதி அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இந்த கோரிக்கையை விடுத்துள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவதற்கான சட்ட மூலத்தை வரைவதற்காக நியமிக்கப்பட்ட குழு அதன் அறிக்கையையும் வரைவு சட்ட மூலத்தையும் நீதி அமைச்சரிடம் கையளித்துள்ளது.

1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு சட்டம், நீண்ட காலமாக சட்டப் புத்தகங்களிலிருந்து நீக்கப்பட வேண்டிய ஒரு கொடூரமான சட்ட

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# அநுர அரசாங்கத்திலும் வலி வடக்கில் காணிகள் விடுவிக்க நடவடிக்கையில்லை!



அநுர அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் கடந்த நிலையிலும் மக்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை என்று வலி வடக்கு தவிசாளர் சுகிர்தன் தெரிவித்துள்ளார்.

வலி வடக்கு பிரதேச சபையின் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வலி வடக்கு பிரதேசமானது இராணுவ ஆக்கிரமிப்புக்குள் இருந்து படிப்படியாக விடுவிக்கப்பட்ட போதிலும் 20 சதவீதமான நிலங்கள் மக்கள் மீள் குடியேற அனுமதிக்கப்படாத பிரதேசங்களாக காணப்படுகின்றன.

குறிப்பாக 21 வட்டாரங்களாகக் காணப்படினும் 20 வட்டாரங்களே விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், பலாலி வட மேற்கு மற்றும் பலாலி மேற்கு பகுதிகளில் ஒரு அங்குலம் கூட விடுவிக்கப்படாத நிலையுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அரசு பதவியேற்று ஒரு வருடத்தை கடந்த போதிலும் மக்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை.

தமது காணிகள் விடுவிக்கப்படும் என மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

இதற்கு தங்களின் சபை உறுப்பினர்கள் முயற்சியை எடுத்துக் கொண்டுள்ளனர் என்றும் வலி வடக்கு தவிசாளர் சுகிர்தன் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் நடந்தது பயங்கரவாத தாக்குதல் – தாமதமாக அறிவிப்பு




கடந்த திங்களன்று(10) டெல்லியில் நடந்த செங்கோட்டை குண்டுவெடிப்பில் 13 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர், இதை “பயங்கரவாத தாக்குதல்” என்று இந்தியா அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அமைச்சரவை புதன் கிழமை நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தில், இந்தச் செயல் “தேச விரோத சக்திகளால்” நடத்தப்பட்டதாகக் கூறியுள்ளது. குற்றவாளிகள், அவர்களின் ஒத்துழைப்பாளர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களை” அடையாளம் கண்டு நீதியின் முன் நிறுத்துமாறு பாதுகாப்பு நிறுவனங்களுக்கு அமைச்சரவை உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவின் செய்தியை அமெரிக்க வெளியுறவுச்செயலாளர் மார்கோ ரூபியோ ஆதரித்து, “இது தெளிவாக ஒரு பயங்கரவாதத் தாக்குதல், அதிக வெடிக்கும் பொருட்கள் நிரப்பப்பட்ட ஒரு கார், வெடித்துள்ளது” என்று தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# தன்சானியாவில் தேர்தல் வன்முறை - 1000 பேர் பலி




கடந்த மாதம் சர்ச்சைக்குரிய பொதுத் தேர்தலுக்குப் பிறகு தான்சானியாவில் வெடித்த அமைதியின்மையின் போது நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர் மற்றும் தெரியாத எண்ணிக்கையிலானவர்கள்காயமடைந்தனர் அல்லது தடுத்து வைக்கப்பட்டனர் என்று ஐ.நா மனித உரிமைகள் அலுவலகம் செவ்வாயன்று(11) தெரிவித்துள்ளது.

“பாதுகாப்புப் படையினர் தெருக்களிலும் மருத்துவமனைகளிலும் இருந்து உடல்களை அகற்றி இனம்தெரியாத இடங்களுக்கு கொண்டு செல்வது ஆதாரங்களை மறைக்கும் முயற்சி என்ற தகவல்களும் உள்ளன” என்று ஐ.நா மனித உரிமைகள் தலைவர் வோல்கர் டர்க் கூறினார்.

கொலைகள் குறித்து சுயா

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# போருக்கு தயாராகின்றது வெனிசுலா




கரீபியனில் அமெரிக்க இராணுவக் குவிப்பு தொடர்ந்து வருவதற்கு பதிலளிக்கும் விதமாக, வெனிசுலா தனது ஆயுதப் படைகளை மிகுந்த எச்சரிக்கையுடன் நிறுத்தி, நாடு தழுவிய அளவில் பெருமளவில் துருப்புக்களை நிறுத்த உத்தரவிட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் விளாடி மிர் பத்ரினோ லோபஸ் இந்த வாரம் கிட்டத்தட்ட 200,000 இராணுவ வீரர்கள் அணிதிரட்டப்பட்டு “முழு செயல்பாட்டுத் தயார்நிலையில்” வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# காச நோயால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் – ஐ.நா எச்சரிக்கை



2024 ஆம் ஆண்டில் காசநோய் இறப்புகள் 3 சதவீதம் குறைந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு (WHO) தெரிவித்துள்ளது. புதன் கிழமை(12) வெளியிடப்பட்ட அதன் வருடாந்திர காசநோய் அறிக்கையில், ஐக்கிய நாடுகளின் சுகாதார நிறுவனம் 2023 முதல் காசநோய் கிட்டத்தட்ட 2 சதவீதம் குறைந்துள்ளதாகக் தெரி விக்கப்பட்டுள்ளது.

கோவிட்-19 தொற்றுநோய்க்குப் பிறகு காசநோய் மற்றும் இறப்புகள் குறைந்திருப்பது இதுவே முதல்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

## கிவுல் ஓயா நீர்த்தேக்க திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு: தமிழ் மக்கள் மீதான கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு!

**பா. அரியநேத்திரன்**



வவுனியா வடக்கில் தமிழ் மக்களின் பூர்வீக குளங்கள் மற்றும் வயல்காணிகள், பழந் தமிழ் கிராமங்கள் என்பவற்றை ஆக்கிரமித்து மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின், (எல்)வலயப்பிரிவால் முன்னெடுக்கப்படவுள்ள 'கிவுல் ஓயா' நீர்த்தேக்கத் திட்டத்திற்கு 2026ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தில் 2.5பில்லியன்ரூபா நிதி ஒதுக்கப்பட்டமைக்கு பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாராளுமன்றில் தனது கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டிருந்தார்.

அத்தோடு தமிழ்மக்களின் பூர்வீககுளங்களையும் அவற்றின் கீழான வயல்நிலங்களையும், பழந்தமிழ் கிராமங்களையும் அபகரித்து செய்யப்படும் இவ்வாறான திட்டங்கள், கட்டமைக்கப்பட்ட தமிழ் இன வழிப்புச்செயற்பாட்டின் வடிவமெனவும் பாராளுமன்ற உறுப்பினர் இதன்போது சுட்டிக்காட்டியதுடன், இத்தகைய கட்டமைக்கப்பட்ட தமிழ்இனவழிப்புச் செயற்பாட்டினை உடனடியாக நிறுத்துமாறும் வலியுறுத்தினார்.

2026ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட இரண்டாம் மதிப்பீட்டு விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே ரவிகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், வவுனியாவின் பூர்வீகத் தமிழ்மக்களுக்குப் பாதகமான கிவுல் ஓயாத் திட்டத்தினை மிகக் கடுமையாக எதிர்க்கின்றேன்.

மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினால் முன்னெடுக்கப்படவிருக்கின்ற கிவுல்ஓயா நீர்த்தேக்க கட்டுமானத்திட்டத்திற்கு 2.5பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

இந்த கிவுல்ஓயாத்திட்டத்தினைச் செயற்படுத்தினால் வவுனியாவடக்கு பிரதேசத்திலுள்ள பூர்வீகத் தமிழ்மக்களின் பத்திற்கும் மேற்பட்ட சிறிய நீர்பாசனக்குளங்களும், அவற்றின் கீழான வயல்நிலங்களும், பழந்தமிழ் கிராமங்களும் பறிபோகும் அபாயம் ஏற்படவுள்ளது.

### கிவுல் ஓயா நீர்த்தேக்கத்திட்டம்

மாஓயா அல்லது பெரிய ஆறு மற்றும் சூரியன் ஆறு ஆகிய ஆறுகளை மறித்து பாரிய அணைக்கட்டு அமைக்கப்பட்டு கிவுல் ஓயாத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த பாரிய நீர்ப்பாசனத் திட்டத்தில் 6000ஏக்கர் நீர்ப்பாசன விவசாயக் காணிகள் வெலிஓயாவில் அத்துமீறி குடியேறியுள்ள பெரும்பான்மை இனத்தவர்கள் 3000 பேருக்கு வழங்கப்படவுள்ளன.

இவ்வாறாக கிவுல்ஓயா திட்டத்தினைச் செயற்படுத்தினால் வவுனியாவடக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக விவசாயக்குளங்கள் மற்றும் அவற்றின் கீழான வயல்நிலங்கள், தமிழர்களின் பூர்வீக்கிராமங்கள் பலவும் நீரில்மூழ்கும் அபாயம் ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்டவிரும்புகின்றேன்.

அந்தவகையில்இராமன்குளம், கொட்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## இலக்கு

### ஈழத்தமிழர் தாயக இறைமை காத்த மாவீரர் நாள் தாயகத்தின் தேசிய நாள் உலகத் தமிழர் பண்பாட்டு மீட்பு நாள் இறைமையை மீளுறுதி செய் நாளாகவுமுள்ளது

ஈழத்தமிழர்கள் தாயகத்திலும் உலக இனமாக அவர்கள் வாழும் உலகநாடுகளிலும் 37வது ஆண்டாக தாயக இறைமை காத்த மாவீரர்களின் வாரத்தினை முன்னெடுத்து, நவம்பர் 26ம் நாள் தேசியத்தலைவனின் தோற்ற நாளையும் மறுநாள் நவம்பர் 27ம் நாள் தாயகத்தின் தேசிய நாளாக மாவீரர் நாளையும் முன்னெடுக்கவுள்ளனர்.

இந்நேரத்தில் "மாவீரரே தொழப்பட வேண்டிய தெய்வங்கள் அவர் தவிர வேறு தொழப்பட வேண்டிய கடவுள் இலவே என வரலாற்றுத் தொடக்ககாலத்திலேயே புலவர் மாங்குடி கிழார் மூதின் முல்லை துறையில் மாவீரனாக நடுகல் பெற்ற மலைநாட்டுத்தலைவனை ஏத்தித் தொழுத புறநானூற்று 335 வது பாடலை இலக்கு மீள்பதிவு செய்து, மாவீரர் நாள் தமிழ்ப்பண்பாட்டின் மீட்பு நாளாகவும் உலகத் தமிழர்கள் அனைவராலும் கொண்டாடப்பட வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறது.

*அடலருந் துப்பின்...*
*குரவே தளவே குருந்தே முல்லை என்று*
*இந்நான்கு அல்லது பூவும் இல்லை*
*கருங்கால் வரகே இருங்கதிர்த் தினையே,*
*சிறுகொடிக் கொள்ளே, பொறிகளர் அவரையொடு*
*இந்நான்கு அல்லது உணாவும் இல்லை*
*துடியன், பாணன், பறையன், கடம்பன் என்று*
*இந்நான்கு அல்லது குடியும் இல்லை*
*ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி*
*ஒளிறு ஏந்து மருப்பின் களிறு எறிந்து வீழ்ந்தெனக்*
*கல்லே பரவின் அல்லது*
*நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே!*

என்னும் இப்பாடல் "வெல்வதற்கரிய வலிமையைப் பற்றிக் கூறுவதாயின் குரவம், தளவம், குருந்தம், முல்லை என்னும் இந்நான்கும் தவிர வேறு பூ இல்லை. வரகு, தினை, கொள், அவரை ஆகிய நான்கையும் தவிர வேறு உணவு இல்லை. துடியன், பாணன், பறையன், கடம்பன் ஆகிய நான்கு குடிகளையன்றி, வேறு சிறப்பான குடிகள் இல்லை. பகைவர் படைகளை முன்னேறிச் செல்ல விடாது தடுத்துப் பெரிய தந்தங்களை உடைய யானையை வீழ்த்தி வெற்றி கொண்டு தாமும் நடுகல் பெற்று மரணத்தை வென்று காலம் ஆகி காலம் உள்ளவரை வாழும் மாவீரர்களைப் பூவும் நெல்லும் சொரிந்து பரவித் தொழுதல் அன்றி வேறு வழிபடும் தெய்வமும் தொழுதற்கு இல்லை" தமிழரின் பண்பாடாக மாவீரரைத் தெய்வமாகப் போற்றும் பண்பாட்டை விளக்குகிறது.

இந்த மாவீரர் போற்றும் நடுகல் வணக்கப் பண்பாடு ஐங்குறு நூறு, அகநானூறு, புறநானூறு போன்ற சங்கத்தமிழின் அகப்பாடல்களிலும் புறப்பாடல்களிலும் காணப்படுகின்றன. ஆயினும் 1989 இல் தமிழீழ நடைமுறையரசில் தேசியத்தலைவர் அவர்களால் நவம்பர் 27 இல் மாவீரர் நாள் ஈழத்தமிழர்களின் தாயகத்தில் மக்களின் பாதுகாப்பான அமைதி வாழ்வுக்கும் வளர்ச்சிகளுக்கும் வீரச்சாவடைந்த மாவீரர்களின் மாவீரர்நாள் தாயகத்தின் தேசிய நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னரே உலக வரலாற்றில் மீளவும் மாவீரர்களைப் போற்றும் தமிழ்ப்பண்பாடு காலத்துக்கு ஏற்ப மீள்உற்பத்தி செய்யப்பட்டது என்பது சமகால உலக வரலாறாக உள்ளது. எனவேதான் மாவீரர் நாள் உலகத் தமிழ்ப்பண்பாட்டு மீட்பு நாளாகவும் கொண்டாடப்பட்டு ஈழத்தமிழரின் இறைமையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் இன்று வரையான தொடர்ச்சியை உலகிற்கு வெளிப்படுத்த வேண்டியுள்ளது என இலக்குக் கருதுகிறது.

அத்துடன் மாவீரர் நாள் வணக்கத்துக்குரிய புனிதமான நாளாகவும் சக்தி தரும் நாளாகவும் உள்ளது என்பதை மேற்கூறிய பாடல் தெளிவாக்கியது. இந்நாள் இறந்தவராக ஒருவரை அறிவித்து விளக்கேற்றும் நாளல்ல, இறந்தவர்களை நினைக்கும் நாளுமல்ல, இத்தகைய நோக்கில் போக்கில் மாவீரர்நாளை அணுக முயற்சிப்பவர்களுக்கும் சிறிலங்கா அரசாங்கத்துக்கும் இலக்கு இதனைத் தெளிவுபடுத்த விரும்புகிறது. "மாவீரர் யாரோ என்றால் மரணத்தை வென்றவர்கள்" என்ற ஈழத்தமிழர் தேசியக்கவி புதுவை இரத்தினத்துரை அவர்களின் சுருக்கமான கவி வரிகள் மரணத்தை வென்றவர்கள் மாவீர்கள் எனப் பிரகடனப்படுத்திய நிலையில் இறந்தவர் நினைவுநாளாக எவ்வித தடையுமின்றி ஈழத்தமிழர் மாவீரர்நாளைக் கொண்டாட நாமனுமதிக்கின்றோம் என்னும் சிறிலங்கா அரசின் அறிவிப்பு எவ்வளவு தந்திரமாக ஈழத்தமிழர் மாவீரர் வணக்கப்பண்பாட்டை இளையவர்களிடை வரலாற்றுத் திரிபு செய்ய முயற்சிக்கிறது என்பதை இலக்கு இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

ஈழத்தமிழர் தாயகத்தின உண்மைகளின் ஒளியாக, ஈழத்தமிழரின் தேசியத்தை மீளுறுதி செய்யும் வழியாக யாராலும் என்றும் பிரிக்க இயலாத தன்னாட்சியைப் பயன்படுத்தி பாதுகாப்பான அமைதியும் வளர்ச்சியும் உள்ள வாழ்வாக ஈழத்தமிழர் தங்கள் வாழ்வை அமைக்கத் தோன்றாத்துணையாகச் சக்தி தரும் மாவீரரை கடவுளின் இருப்பு என்னும் ஒளி வடிவாக மாவீரத் தீபமாக ஏற்றித் தொழும் நாள் இந்நாள்.

இதனாலேயே மாவீரத் தீபம் மாவீரர் நாளில் ஏற்றியதும் தேசமே மாவீரத்தின் ஒளி வெள்ளமாகி எங்கள் பாரம்பரிய தாயகத்தின் (Traditional Home Land) வரலாற்று இறைமையைப் Historical Sovereignty) பாருங்களென அந்த ஒளிவெள்ளத்தால் தாயகத்தின் எல்லைகளின் ஒருமைப்பாட்டையும் (Territorial integrity) உலகுக்கு தெளிவாக்க எடுத்துக்காட்டும். ஈழத்தமிழர்கள் தங்கள் இறைமையை சனநாயக வழிகளில் ஈட்டப்பட்ட இறைமையாகவும் (Earned Sovereignty) மக்கள் போராட்டத்தின் மூலம் மீட்கப்பட்ட இறைமையாகவும் (Remedial Sovereignity) வளர்த்துக் கொண்ட பரிணாமத்தை உணர்த்தும் நாளாகவும் மாவீரர்நாள் உரைகள் அமையும்.

நீதிக்கான ஈழத்தமிழரின் போராட்டங்கள் அவர்கள் என்றுமே எதனாலும் தங்களைச் சரணடைய வைக்க இயலாதென சட்ட பூர்வமாக வெளிப்படுத்தி அறநிலை இறைமையை (Moral Sovereignty) உலகுக்கு உறுதி செய்து வருவதை நினைப்பிக்கும் நாளாகவும் மாவீரர்நாள் உள்ளது. மாவீரர்நாள் ஈழத்தமிழர்கள் இறைமையுள்ள மக்களாகத் தாங்கள் திகழ்வதற்கான எல்லா நிபந்தனைகளையும் மேற்காட்டியவாறு தங்களுக்கு இருப்பதாகத் தெளிவுபடுத்தித் தங்களின் சிவில் வாழ்வை எந்த கட்டாயமும் இல்லாது தங்களின் வரலாற்றுத் தாயகத்தில் பாதுகாப்பான அமைதி வாழ்வாகவும் வளர்ச்சிகள் கொண்ட வாழ்வாகவும் தங்களின் தன்னாட்சியின் அடிப்படையில் அமைத்து மற்றைய தேசஇனத்துடனும் குடிகளுடனும் சமத்துவ சகோதரத்துவ சுதந்திர வாழ்வை கூட்டமைக்க ஈழத்தமிழர்கள் விரும்புகிறார்களென அவர்களின் சிவில் இறைமையை (Civil Sovereignty) உலகுக்கு உறுதிப்படுத்தும் முக்கிய நாள். சிவில் சமுகங்கள் மேலும் மேலும் கட்டமைக்கப்பட்டு ஈழத்தமிழர் ஒருங்கிணைப்பு தேசமாக எழ இந்நாளில் அனைவரும் சிந்திக்க வேண்டுமென்பது இலக்கின் எண்ணம்.

மேலும் இன்றுள்ள உலக-ஆசிய-இந்தியத்துணைக்கண்ட-அரசியல், சிறிலங்கா அரசச் சூழல் என்பன ஈழத்தமிழர் சிறிலங்கா என்னும் சிங்கள பௌத்த நாட்டுக்குள் வாழ வேண்டிய சமுகம் என்னும் நிலையை ஒருமித்த அரசால் உருவாக்கும் நோக்கும் போக்கும் உடையதாக உள்ளது. இந்நிலையில் 2025ம் ஆண்டின் மாவீரர் நாளின் முக்கியத்துவம் மிகப் பெரிதாக உள்ளது. இதனை ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரும் மனதிருத்தித் தமக்குள் உள்ள எல்லாப் பேதங்களையும் கடந்து தேசமாக ஒருமைப்பட்டு மாவீரர்நாளில் எழுவதிலேயே தாயகத்திலும் உலகிலும் மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்பதே இலக்கின் இவ்வார எண்ணமாக உள்ளது.

**ஆசிரியர்**

கவிதை




# யார் இந்த மாவீரர்?

அண்ணன் நெறிநின்று துப்பாக்கி ஏந்தியே
மண்ணினைக் காத்தவர் மாவீரர் - எங்கள்
மண்ணுறை மக்களின் துன்பங்கள் நீக்கவே
இன்னுயிரீந்தவர் மாவீரர்

இதயத் தெழுந்திட்ட சுதந்திர தாகத்தால்
சமர்க்களம் புகுந்தவர் மாவீரர் - பெரும்
அதிசயத் தோடிந்த அகிலமும் வியக்கவே
அதிரடி தொடுத்தவர் மாவீரர்

சிங்கள இராணுவம் சிதறியே யோடிடச்
செருக்களம் துளைத்தவர் மாவீரர் - அவர்
எஞ்சிடா வண்ணம் அழித்தனல் மூட்டியே
சரித்திரம் படைத்தவர் மாவீரர்

சொந்தங்கள் பந்தங்கள் யாவும் அகற்றியே
மக்களைக் காத்தவர் மாவீரர் - தமிழ்ச்
சந்ததி வாழ்ந்திடச் சாதனையாலருஞ்
செயல்கள் புரிந்தவர் மாவீரர்

மண்கிண்டி மலையினில் படைத்தளம் தகர்த்தருஞ்
சமர்க்களம் புரிந்தவர் மாவீரர் - உடன்
பெண்கள் அணியொடு
கடற்புலியிணைந்தந்தக்
கிளாலியை வென்றவர் மாவீரர்

பருத்தித் துறைக்கரைச் சமுத்திர வெளியினில்
டோறா தகர்த்தவர் மாவீரர் - பகை
உருத்தெரியாமலே பெருமிழப் பெய்திடச்
சாதனை படைத்தவர் மாவீரர்

தானைத் தலைவனின் ஆணை சுமந்தன்று
தம்மினம் காத்தவர் மாவீரர் - நெஞ்சில்
மானம் பெரிதென வுணர்ந்ததனாலுயிர்
அர்ப்பணித் தழிந்தவர் மாவீரர்

அனுரத புரியினில் விமானத் தளமொரு
இராவினிற் றகர்த்தவர் மாவீரர் - அவர்
நினைத்திடற் கரியபல் சாதனையாலுயர்
உச்சியில் ஒளிர்பவர் மாவீரர்

உலகவல் லரசினர் ஒன்றுபட் டிழைத்திட்ட
சதியினாலழிந்தவர் மாவீரர் - இன்று
மகிமையி னுச்சியில் மாவீரரென்றென்றும்
மக்களின் ஒளியினில் துலங்குகின்றார்.

—— மாரீசன்

# அநுரவின் பட்ஜட்டுக்கு

# தமிழரசு நடுநிலை

## ஏன்? எதற்காக? எப்படி?

2026ஆம் ஆண்டுக்கான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வரவு,செலவுத் திட்டத்தின்; இரண்டாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பு 14-11-2025ஆம் திகதி வெள்ளிக்கிழமை 118 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இதில் 160வாக்குகள் ஆதரவாகவும், 42வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டுள்ளன. ஜீவன் தொண்டமான், மனோகணேசன், திகாம்பரம், இராதாகிருஷ்ணன் வலிந்து ஆதரவை வெளியிட்டிருக்கின்றார்கள். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், கபீர் ஹாசிம், தொழிலாளர்கட்சியின் தலைவர் காதர் மஸ்தான் உட்பட 12 எம்.பி.க்கள் சபையில் பிரசன்னமாக வில்லை.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வழக்கம் போல, எதிர்த்து வாக்களிக்க, கடந்த தடவை ஆதரித்து வாக்களித்த செல்வம் அடைக்கலநாதன் இம்முறை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களின் கடுமையான பிரயத்தனத்துக்கு மத்தியில் எதிர்த்து வாக்களித்துள்ளார்.

செல்வம் அடைக்கலநாதனும் இறுதி நேரம் வரையில் இரண்டும் கெட்டான் நிலைமையில்தான் இருந்தார். வரவு,செலவுத்திட்டத்தினை எதிர்த்தால் தனது கடந்தகால செயற்பாடுகள் உட்பட அண்மைய நாட்களில் சர்ச்சைக்குள்ளாகியுள்ள இளைஞனின் தற்கொலை தொடர்பில் தனக்கு நெருக்கடிகள் ஏற்படலாம் என்ற அச்சம் அவருக்கு உள்ளூரக் காணப்பட்டது.

இருப்பினும் இறுதியில், தன்மீதான அண்மைக்கால விமர்சனங்களைக் களைவதற்கும், ஜனயநாக தமிழ்த் தேசியக் கூட்டணியின் கூட்டு முடிவை அங்கீகரிப்பதற்கும் எதிர்த்து வாக்களிப்பது தான் ஒரே தெரிவாக அவருக்கு இருந்ததை அவர் உணர்ந்திருப்பார் போலும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினைப் பொறுத்தவரையில் இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை, 1977இல் ஜே.ஆர். ஜயவர்த்தனவின் ஐ.தே.க. அரசாங்கத்திற்குப் பிறகு, தனித்து நின்று பெற்றுக்கொண்டுள்ளதோடு மிகவும் வலுவான கட்சியாக ஆட்சி அதிகாரத்தில் உள்ளது.

அத்தகைய நிலையில், வரவு, செலவுத் திட்டத்தினை எதிரணியில் உள்ள தரப்புக்கள் ஆதரிக்கவோ, அல்லது நடுநிலை வகிக்க வேண்டிய எதிர்பார்ப்புக்கூட தேசிய மக்கள் சக்தியிடத்தில் இருக்கவில்லை என்பது யதார்த்தமான விடயமாகும். அப்படியிருக்கவும், இலங்கைத் தமிழரசுக் கட்சி எதற்காக நடுநிலை வகிக்கும் முடிவினை எடுத்தது என்பது பெருங்கேள்வி.

இங்கே, 'நடுநிலை' வகிக்கும் முடிவு தானே எடுக்கப்பட்டிருக்கின்றது என்று கூறினாலும் 'நடுநிலை' என்பது ஒருவகையில் 'ஆதரவு' நிலைப்பாடுதான்.ஆகவே எதற்காகதமிழரசுக்கட்சி அவ்விதமான முடிவினை எடுத்தது. அதற்கு என்ன காரணங்கள் என்பது பற்றி சற்றே கூர்ந்து கவனிக்க வேண்டிய தருணமிதுவாக உள்ளது.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்ததன் பின்னர், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவோ, வாக்குறுதிகளை நிறைவேற்றவோ, ஏன் காது கொடுத்துக் கேட்கவோகூட நேரம் ஒதுக்கவில்லை. இலங்கைத் தமிழரசுக் கட்சி ஜனாதிபதி அநுரகுமாரவைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கீடு செய்யுமாறு கோரி எழுத்துமூலமாகக் கடிதம் அனுப்பப்பட்டு ஐந்து மாதங்களாகியும் பதில் கிடைக்காத நிலைமையே நிலவுகிறது.

இத்தகைய கடுமையான மனோநிலையில் இருக்கும்அரசாங்கத்தின்வரவு,செலவுத்திட்டத்தை எதிர்கொள்வது குறித்து ஆராய்கின்றபோது 'எதிர்ப்பதை தவிர வேறு தெரிவை கிஞ்சித்தும் சிந்திப்பதென்பது பொருத்தமற்றதாகும்.



மேலும், இந்த வரவு,செலவுத் திட்டத்தில் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் நலன்களுக்கான தனித்துவமான திட்டங்களோ, நிதி ஒதுக்கீடுகளோ இல்லை. வழக்கம்போலவே பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. தேசிய, மையவாத சிந்தனையின் வெளிப்பாடுகளையே ஒதுக்கீடுகள் மிகத் தெளிவாகக் காண்பிக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறானதொரு பின்னணியில், தமிழரசுக் கட்சி வரவு,செலவுத் திட்ட வாக்கெடுப்பை எதிர்ப்பதை தாண்டி நடுநிலை வகிக்கும் முடிவை எடுத்திருப்பது, அரசாங்கத்திற்கு நல்லெண்ண சமிக்ஞையை காட்டுவதற்காக எடுக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. ஆனால், 'நல்லெண்ண அடிப்படையில் ஆதரிப்பது' இலகு தமிழில் 'அரசாங்கத்துக்கு முண்டுகொடுப்பது' என்பது தமிழ்த் தேசியக் கட்சிகளின் வரலாற்றில் தொடர்ச்சியானசீரழிவையே ஏற்படுத்தியிருக்கிறது என்பது தான் வரலாற்று உண்மையாகும்.

தமிழர் விடுதலைக்கூட்டணி, 1965ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்கவின் தேசிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டபோது வரவு, செலவுத் திட்டத்திற்கு ஆதரவளித்தது. ஈற்றில் டட்லி-செல்வா உடன்பாடு கிழித்தெறியப்பட்டது. பின்னர், 2010-2011இல் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தியபோது நல்லெண்ண சமிக்ஞையாக வரவு,செலவத்திட்ட வாக்கெடுப்பில் பங்கேற்காத நிலைமை வெளிக்காட்டப்பட்டது. இதன்விளைவாக, 16 சுற்றுப் பேச்சுக்களின் முடிவில் வெற்றுக்கையுடன் வெளியேற வேண்டிய நிலையே ஏற்பட்டது.

**விதுரன்**

2015இல் மைத்திரி-ரணில் கூட்டு அரசாங்கத்துடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேன்நிலவு கொண்டாடிய காலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அத்தனை வரவு, செலவுத் திட்டங்களையும் பிரதான எதிர்க்கட்சியாக இருந்தும் ஆதரித்தபோதும் எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

எனவே, இலங்கைத் தமிழரசுக்கட்சி தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சிகள் 'நல்லெண்ண அடிப்படையில்' அரசாங்கங்களுக்கு ஆதரவளிக்கப்போய் மூக்குடைப்பட்டுக் கொண்டது தான் வரலாறாகிறது. அப்படியிருக்க, மீண்டும் அதேபோன்றதொரு நிலைப்பாட்டை இலங்கைத் தமிழரசுக் கட்சி எடுத்திருப்பது அர்த்த பூர்வமானதாகக் கொள்ள முடியாது,

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 2026ஆம் ஆண்டுக்கான வரவு,செலவுத் திட்ட வாக்கெடுப்பில் நடுநிலை வகிக்கும் தீர்மானத் துக்குக் காரணம், ஜனாதிபதி அநுரகுமார தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடத் தயாரென அறிவித்திருப்பது தான் என்று பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தனது பாராளுமன்ற உரையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆனால், அவர் ஜனாதிபதி அநுர அதனை எப்போது கூறினார், எங்கே உத்தியோகபூர்வமாக அறிவித்தார் என்பதை வெளிப்படுத்தவில்லை. தனது தந்தையாரின் மரணச்சடங்கிற்கு வந்திருந்த ஜனாதிபதி அநுர வெளியேறும் போது, 'நாங்கள் சந்தித்து உரையாடுவோம்' என்று கூறிவிட்டுச் சென்றார். இது வழக்கமாக உணர்வுபூர்வமான சடங்குகளில் பங்கேற்பவர்கள் கூறுகிற விடயம். ஆகவே, அந்தக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் எடுக்கப்பட்டிருக்குமாயின் அது சிறுபிள்ளைத்தனமானது.

இதேநேரம், தமிழரசுக்கட்சிக்குள் காணப்படும் உள்ளகப் பிளவுகளின் பிரகாரம், சாணக்கியன் உட்பட சுமந்திரன் அணியினர் நடுநிலை வகிப்பதாகத் தீர்மானித்தால், சிறீதரன், சிறீநேசன் போன்றோர் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்;. குறைந்தபட்சம் சாணக்கியனும், சுமந்திரனும் தான் அவ்விதமான முடிவுக்கு காரணமாக இருக்கின்றார்கள் என்பதையாவது வெளிப் படுத்துவார்கள்.

ஆனால் நடுநிலை விகிக்கும் முடிவு எடுக்கப்பட்ட விடயத்தில் சிறீதர னும், சிறீநேசனும் கூட எதிர்ப்பினை வெளிப் படுத்த வில்லை. அவர்களும் அதனை ஆதரிக்கும் நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். தமிழ் மக்கள் சார்ந்த எத்தனையோ பொது விடயங்களில் இருதரப்பும் ஒன்றாக ஒரு மேடையில் அமர்வதற்கு கூட மறுத்திருந்த நிலைமைகளில்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# ஈழத்து துயிலும் இல்லங்களும்!

## எழுச்சி கூறும் கார்த்திகை 27ம்!



பா. அரியநேத்திரன்

1982 கார்த்திகை 27ல் விடுதலைப்புலிகளின் முதலாவது மாவீரரான யாழ்ப்பாணம் வடமாராட்சி கம்பர்மலையை சேர்ந்த செல்வச்சந்திரன் சத்தியநாதன் எனும் இயற்பெயரையும் சங்கர் என்ற இயக்கத்தின் பெயரையும் கொண்ட மாவீரன் சாவைத்தழுவிய நாளே மாவீரர் நாளாகும்.

அவர் வீரச்சாவை தழுவி சரியாக ஏழு வருடங்கள் கடந்த நிலையில் இந்தியப்படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் போர் இடம்பெற்ற காலத்தில்தான் முதலாவது மாவீரர் நாள் 1989 கார்த்திகை 27 அன்று வன்னி நிலப்பரப்பின் அடர்ந்த காட்டுப் பகுதியில் தமிழீழத் தேசியத் தலைவரால் முதலாவது விடுதலைப்புலிகளின் மாவீரரான லெப்டினன்ட் சங்கர் அவர்களின் வீரச்சாவு நாளான "கார்த்திகை 27ஐ மாவீரர் நாளாக பிரகடனப் படுத்தி உரையாற்றினார் 1989ல் 1307 மாவீரர்கள் வீரச்சாவை தழுவியிருந்தனர். அந்த முதலாவது மாவீரர் உரையில் தலைவர் வே.பிரபாகரன் கூறியது.



"எமது போராட்டத்தில் இன்று ஒரு முக்கியமான நாள். இதுவரை காலமும் எமது புனித இலட்சியமான தமிழீழ இலட்சியத்துக்காக உயிர்த்தியாகம் செய்த 1307 போராளிகளை நினைவு கூரும் முகமாக இந்த மாவீரர் நாளை முதல் முறையாக இன்று ஆரம்பித்துள்ளோம். எத்தனையோ உலக நாடுகளில் அந்த நாடுகளின் விடுதலைக்காக போரிட்ட படை வீரர்களின், பாதுகாப்புக்காகப் போரிட்ட படைவீரர்களின் நினைவாகவும் இப்படிப் பட்ட மாவீரர் நாட்களைக் கொண்டாடுவது வழக்கம். உங்களுக்குத் தெரியும் இதுவரை காலமும் எமது இயக்கத்தில் வீரச் சாவடைந்த ஒவ்வொரு போராளிக்குமாகத் தனிப் பட்ட நினைவு நாட்களைக் கொண்டாடுவது வழக்கம்.

ஆனால் 1989ல் இந்த வருடத்திலிருந்து வீரச்சாவடைந்த எல்லோரையும் மொத்தமாக வருடத்தில் ஒரு நாள் நினைவு கூர்ந்து அந்த நாளையே "மாவீரர் நாள்" ஆகப் பிரகடனப் படுத்தியுள்ளோம். அதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. எங்களது விடுதலைப் போராளிகளில் முதலாவதாக வீரச்சாவு அடைந்த "சங்கரின்" நினைவு தினமான இன்று அந்த மாவீரர் நாளை நாங்கள் பிரகடனப்படுத்தியுள்ளோம்.

அத்தோடு வழமையாக எங்கள் மக்களில் ஒரு பழக்கம் உண்டு. உயர்ந்த பதவிகள் வசதியானவர்கள் இப்படிப்பட்டவர்களைத் தான் பெரிதாகப் பார்க்கும் பழக்கம் உண்டு. அது போல எமது விடுதலைப் போராட்டத்திலும் தலைவர்களை மட்டும் பிரித்து அவர்களது செய்கைகளை மட்டும் பெரிதாகப் பார்க்கக் கூடாது என்பதற்காகவும் எல்லாப் போராளிகளும் சமம் எனும் ஓர் நோக்கத்துடனும் இந்த நாளை நாம் நினைவுகூர முடிவு செய்துள்ளோம்" என அந்த உரையில் குறிப்பிட்டிருந்தார்.

1989 கார்த்திகை,27 தொடக்கம் 2008, கார்த்திகை 27 வரை விடுதலைப்புலிகளின் தலைவர், மாவீரர் தினத்தில் பிரதான சுடர் ஏற்றி மாவீரர் தின உரை நிகழ்த்தியுள்ளார்.

2009 கார்திகை 27 தொடக்கம்எதிர்வரும் 2025 கார்திகை 27 வரை 17 மாவீரர்தினங்கள் தலைவரின் உரையின்றி பொதுமக்களாலும், முன்னாள் போராளிகளாலும், சில தமிழ்தேசிய கட்சி உறுப்பினர்களாலும் வடகிழக்கில் உள்ள இராணுவம் இல்லாத துயிலும் இல்லங்களிலும் பொது இடங்களிலும் தொடர்சியாக செய்து வருகின்றனர். அதேபோல் புலம் பெயர் தேசம், மத்தியகிழக்கு நாடுகள், தமிழ்நாடு உட்பட உலகத்தமிழர்கள் வாழும் இடமெலாம் தொடர்ச்சியாக மாவீரர்களை நினைவு கூருவது இடம் பெற்று வருகிறது.

வடகிழக்கில் 2008 வரை 27 துயிலும் இல்லங்கள் இருந்தபோதும் இறுதியுத்த காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மேலும் 06, துயிலும் இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்டு மொத்தமாக 33 துயிலும் இல்லங்கள் இப்போது உள்ளன.

**மாவீரர் துயிலுமில்லங்கள் விபரம் :-**
**யாழ்ப்பாணம் மாவட்டம்:**

1)சாட்டி தீவகம் துயிலுமில்லம்.
2)கோப்பாய் துயிலுமில்லம்,
3)எல்லங்குளம் துயிலுமில்லம்,
4)கொடிகாமம்துயிலுமில்லம்,
5)உடுத்துறை துயிலுமில்லம்.

**கிளிநொச்சி மாவட்டம்.**
6)கனகபுரம் துயிலுமில்லம்,
7)விசுவமடு துயிலுமில்லம்,
8)முளங்காவில் துயிலும் இல்லம்.

**முல்லைத்தீவு மாவட்டம்:**
9)முள்ளியவளை துயிலுமில்லம்,
10)அலம்பில் துயிலுமில்லம்,
11)ஆலங்குளம் துயிலுமில்லம்,
12)வன்னிவிளாங்குளம் துயிலுமில்லம்,
13)களிக்காடு (நெடுங்கேணி) துயிலுமில்லம்.
மன்னார் மாவட்டம்.
14)ஆட்காட்டிவெளி துயிலுமில்லம்,
15)பண்டிவிரிச்சான் துயிலுமில்லம்

**வவுனியா மாவட்டம்.**
16) ஈச்சங்குளம்துயிலுமில்லமும் மணலாறு பிரதேசம்.
17உதயபீடம் (டடி முகாம்) துயிலுமில்லம்,
18)இதயபீடம் (ஜீவன் முகாம்) துயிலுமில்லம்
திருகோணமலை மாவட்டம்.
19)ஆலங்குளம் துயிலுமில்லம்,
20)தியாகவனம்
21)பெரியகுளம் துயிலுமில்லம்,
22)உப்பாறு துயிலுமில்லம்.

**மட்டக்களப்பு மாவட்டம்.**
23)தரவை துயிலுமில்லம்,
24)தாண்டியடி துயிலுமில்லம்,
25)வாகரை கண்டலடி துயிலுமில்லம்,
26)மாவடிமுன்மாரி துயிலுமில்லம்.

**அம்பாறை மாவட்டம்.**
27)கஞ்சிகுடியாறு துயிலுமில்லம்

மொத்தமாக இந்த 27 துயிலும் இல்லங்கள்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

நேர்காணல்

# தமிழ் முஸ்லீம் முரண்பாடுகள் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் களையப்பட வேண்டும்

**1990இல் யாழ்ப்பாணத்திலிருந்து இஸ்லாமியர்கள் வெளியேற்றப்பட்ட நிகழ்வு குறித்து உங்கள் பார்வை என்ன?**

இஸ்லாமியர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான உறவைப் புரிந்துகொள்ள, முதலில் ஒரு வேறுபாட்டை அறியவேண்டும். “இஸ்லாமியர்கள்” என்பது மத அடையாளம், ஆனால் “முஸ்லிம்கள்” என்பது அரசியல் அடையாளம்.அதேபோல், “தமிழர்” என்பது அரசியல் அடையாளம்; “இந்துக்கள்”, “சைவர்கள்”, “கிறிஸ்தவர்கள்” என்பது மதஅடையாளங்கள்.

அதாவது, மதம் என்பது ஆன்மீக அடிப்படையிலான ஒன்று, ஆனால் “முஸ்லிம்” என்ற சொல் அரசியல் நோக்கத்துடன்உருவானது.

இந்த வேறுபாட்டை புரியாமல், பலரும் உள்ளனர். இது தான் பின்னர் ஏற்பட்ட முரண்பாடுகளுக்கும், தவறான புரிதல்களுக்கும் அடிப்படை.

**இஸ்லாமியர்களின் வரலாறு, கலாச்சாரம், தமிழர்களுடன் இருந்த உறவு பற்றிச் சொல்லுங்கள்**

இஸ்லாமியர்களின் வரலாறு இலங்கையில் மிகவும் பழமையானது.அவர்கள் முதன்முதலில் வர்த்தக நோக்கத்திற்காக அரபு நாடுகளிலிருந்து வந்தனர். அவர்கள் தமிழர்களுடன்நெருங்கிய உறவைக் கொண்டிருந்தனர். வாழ்விலும், வணிகத்திலும், சமூகப் பண்பாட்டிலும் இணைந்து இருந்தனர்.

யாழ்ப்பாணம், மன்னார், திருக்கோணமலை போன்ற பகுதிகளில் இஸ்லாமியர்கள் குடியேறினர். அவர்கள் தமிழில்பேசினர், தமிழ்ப் பெயர்களை ஏற்றுக்கொண்டனர், தமிழ் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாகவே வாழ்ந்தனர். அதனால், அவர்கள் “ஈழத்தமிழ் இஸ்லாமியர்கள்” என்று அழைக்கப்பட்டனர்.

பின்னர் அரசியல் மாற்றங்களும் மத அடையாளங்களும் வலுப்பெற்றபோது, சில குழுக்கள் அவர்களை தனித்தஇனமாகப் பிரித்துக் காட்டத் தொடங்கின. அது தான் பின்னர் உருவான தவறான புரிதல்களின் தொடக்கம்.

உண்மையில், இஸ்லாமியர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே நீண்டகால நட்புறவு இருந்தது. பண்டையகாலங்களில் அவர்கள் ஒரே சந்தையில் வணிகம் செய்தனர், ஒரே திருவிழாக்களில் கலந்து கொண்டனர், திருமணம்,விழாக்கள், இறுதிச்சடங்குகள் எல்லாவற்றிலும் கலந்துகொண்டனர். மொழி, உணவு, உடை, பழக்கவழக்கங்கள்அனைத்திலும் தமிழ் பண்பாட்டின் தாக்கம் இருந்தது.

ஆனால் அரசியல் சக்திகள் அந்த உறவைச் சிதைக்க முயன்றபோது, மதம் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டது.அதன் விளைவாக 1990இல் நடந்த வெளியேற்றம் போன்ற துயர சம்பவங்கள் நிகழ்ந்தன. அது இருஇனங்களுக்குமிடையே உருவான அரசியல் அவநம்பிக்கையின் விளைவு, தமிழர் சமூகத்தின் இயல்பான பகைமையின் விளைவு அல்ல.

**1990இல் நடந்த இஸ்லாமியர்களின் வெளியேற்றம் எப்படி நடைபெற்றது? அதன் பின்னணி மற்றும் விளைவுகள் என்ன?**

1990ஆம் ஆண்டின் அக்டோபர் மாதம் வடமாகாண வரலாற்றில் மிகவும் துயரமான காலம். அந்த நேரத்தில் வடக்கிலும்கிழக்கிலும் போர் சூழல் நிலவியது. பல இடங்களில் மக்கள் இடம்பெயர்ந்து, உயிர் பாதுகாப்புக்காகஅலைந்து கொண்டிருந்தார்கள்.

அந்தச் சூழலில், சில தவறான தகவல்கள் மற்றும் அரசியல் விளைவுகள் காரணமாக, இஸ்லாமியர்களை யாழ்ப்பாணம்மற்றும் வடமாகாணத்தில் இருந்து வெளியேறச் சொன்னார்கள். இது தமிழர்களின் ஒருமித்த முடிவு அல்ல; சிலஆயுதக்குழுக்களின் அரசியல் உத்தி. அந்த முடிவு அப்போதைய சூழலில் தவறானதாக இருந்தது; அதன் தாக்கம்இன்றும் நீடிக்கிறது.

இஸ்லாமியக் குடும்பங்கள் தங்கள் வீடுகள், நிலங்கள், தொழில்கள் அனைத்தையும் விட்டு வெளியேற வேண்டிய நிலைஏற்பட்டது. அவர்கள் பெரும்பாலானோர் அகதிகளாக மன்னார், கொழும்பு போன்ற இடங்களில் தஞ்சம் அடைந்தனர்.



உயிரோடைத் தமிழ் வானொலிக்கு செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.

சில குடும்பங்கள் தாயகத்துக்கு திரும்ப முடியாமல் தலைமுறைகள் கடந்தும் வேதனையுடன் வாழ்ந்தனர். இந்தநிகழ்வின் மிகப் பெரிய பாதிப்பு, தமிழர் மற்றும் இஸ்லாமியர் இடையேயான நம்பிக்கை முறிந்தது.

அந்த நம்பிக்கை மீண்டும் உருவாக பல ஆண்டுகள் எடுத்தது, இன்னும் சிலரிடத்தில் முழுமையாகப் பிறக்கவில்லை.

இது இன வெறியின் விளைவு அல்ல, போர் கால அரசியல் குழப்பத்தின் விளைவு. இரு இனங்களுமே அதனால்பாதிக்கப்பட்டனர். அதனால், வரலாற்றை அரசியல் பார்வையால் அல்லாமல், மனிதாபிமான பார்வையால் பார்க்கவேண்டும்.

**1990 வெளியேற்றத்துக்குப் பிறகு தமிழர்-இஸ்லாமியர் உறவில் என்ன மாற்றங்கள் ஏற்பட்டன? இன்றையசூழ்நிலையில் அது எப்படி உள்ளது?**

வெளியேற்றத்திற்குப் பிறகு இரு இனங்களுக்குமிடையில் ஒரு பெரும் இடைவெளி உருவானது. இஸ்லாமியர்கள்தங்கள் வாழ்வாதாரம், கல்வி, தொழில் அனைத்தையும் இழந்து புதிய வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டியிருந்தது. அந்தக் காலத்தில் பலர் கொழும்பு, புத்தளம், மன்னார் போன்ற பகுதிகளில் குடியேறினர்.

தமிழர்களும் அதே நேரத்தில் போர், இடம்பெயர்வு, உயிரிழப்புகள் போன்ற துயரங்களை அனுபவித்தார்கள். இதனால்இரு சமூகங்களுமே தங்களது வாழ்வில் தப்பிக்கப் போராடிக் கொண்டிருந்தனர். அதனால் இருவரும் ஒருவரின் துயரத்தை மற்றவர் புரிந்துகொள்ள முடியாமல் போனது.

ஆனால் காலம் மாறியபோது, புதிய தலைமுறைமெல்லமெல்லஅந்தப்பிரிவினையைக் கடந்து மீண்டும் இணைவதைத்தொடங்கியது. இஸ்லாமிய இளைஞர்கள் மற்றும் தமிழ் இளைஞர்கள் கல்வி, வணிகம், சமூக ஊடகங்கள் வழியாக மீண்டும்தொடர்புகளை ஏற்படுத்தினர். பலர் இன்று ஒன்றிணைந்து சமூக நலப்பணிகளில் ஈடுபடுகிறார்கள்.

இன்னும் சில அரசியல் குழுக்கள் அந்தப் பழைய வலிகளை தூண்டி அரசியல் பலம் பெற முயல்கின்றன. ஆனால்பொதுமக்கள் மத்தியில் உண்மையான எதிர்மறை உணர்வு இல்லை. தமிழரும் இஸ்லாமியரும் ஒருவரின் வேதனையை மற்றவர் புரிந்துகொண்டு, அந்த வரலாறு மீண்டும் நிகழக்கூடாத பாடமாக எடுத்துக் கொண்டுள்ளனர்.

எதிர்காலத்தில், நாம் கடந்த காலத்திலிருந்து பாடம் கற்று, ஒற்றுமையுடனும் மரியாதையுடனும் வாழ்வது முக்கியம். அது தான் இன அமைதிக்கும், தாயகத்தின் வளர்ச்சிக்கும் அடிப்படை.

**எதிர்காலத்தில் இரு சமூகங்களும் இணைந்து செல்ல வேண்டிய பாதை பற்றி உங்கள் கருத்து என்ன?**

வரலாறு எத்தனை துயரமாயிருந்தாலும், நாம் அதிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். 1990இல் நடந்தது ஒருதவறான முடிவு. அது தமிழர்களின் உண்மையான மனநிலையை பிரதிபலிக்காது. அந்த நிகழ்வின் வேதனையையும், இழப்புகளையும் இரு சமூகங்களும் உணர்ந்து, அதனை மீண்டும் நிகழக்கூடாத ஒரு பாடமாகக் கொள்ள வேண்டும்.

இன்றைய உலகம் முன்னேற்றத்தின் காலம். மதம், இனமெனப் பிரிந்து வாழும் காலம் இல்லை. தமிழரும்இஸ்லாமியரும் ஒரே தாய் மண்ணின் பிள்ளைகள். அவர்கள் இணைந்து செயல்பட்டால்தான் தாயகத்தின் அரசியல், பொருளாதாரம், கல்வி, கலாச்சாரம் ஆகியவை முன்னேறும்.

இருவருக்குள்ளும் பரஸ்பர மரியாதையும் புரிந்துகொள்ளலும்தான் அவசியம். ஒருவரின் வரலாற்று வேதனையைமற்றவர் மதிக்க வேண்டும்; அதனை மறக்க வேண்டியதில்லை, ஆனால் அதில் சிக்கிக்கொள்ளவும் கூடாது.

அந்த உண்மையை ஏற்று, நம்பிக்கையுடன் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவது தான் நல்ல வழி. நாம் இனஅடிப்படையிலான அரசியலை விடுத்து, மனிதாபிமான அடிப்படையிலான

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# தடை போட்டாலும் மாவீரர் நாள் நினைவு கூரப்படும்

கிண்ணியான்

ஈழப்போரில் வீரச்சாவடைந்த மாவீரர்களை சிறப்பாக ஒவ்வொரு வருடமும் நவம்பர் 27 ம் நாளில் நினைவு கூர்வது கடமையும் உரிமையும் ஆகும்.

வடகிழக்கு தமிழர் தாயகங்களில் உள்ள மாவீரர்களின் துயிலுமில்லங்கள் சுத்தம் செய்யப் பட்டு தற்போது ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றது.



குறிப்பாக தமிழ் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தி மாவீரர்களுக்கு நினைவஞ்சலியை கூட செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலை கடந்த கால அரசாங்கங்களில் காணப்பட்டது.

நீதிமன்ற தடை உத்தரவு, அதனை மீறி நினைவேந்தலில் ஈடுபட்டதால் பல கைதுகளும் இடம் பெற்ற வரலாறுகளும் உண்டு.



தற்போதைய அநுர குமார அரசாங்கத்திலும் இந்த தடைகள் இடம் பெறுமா என்பது சந்தேகிக் கப்படுகிறது. இவ்வாறான நிலையில் இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவிக்கையில், ‘வடகிழக்கு தமிழர்களின் பூர் வீகம் என்பதை சொல்லித்தான் எல்லோருக்கும் தெரிய வேண்டும் என்பதற்கில்லை. அந்த வகையில் உரிமைக்கான போராட்டத்தில் தங்களு டைய இன்னுயிர்களை நீத்த மாவீரர்கள் தினம் கார்த்திகை 27ல் நினைவு கூரப்படுகின்றது.. கடந்த கால அடக்கு முறை காலத்திலும் கூட மாவீரர்களை நினைவு கூர்ந்தே வந்தோம். இந்த முறையும் சாதகமாக இருப்பது போலத் தெரிகிறது. வடகிழக்கு மக்கள் கார்த்திகை 27ல் மாவீரர்கள் தினத்தை விசேடமாக உணர்வெழுச்சியுடன் ஒவ்வொரு துயிலுமில்லத்திலும் உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்துவார்கள். இதற்கான தடைகளற்ற சுதந்திரமான நிலையில் இது நடைபெறும். இதற்காக தமிழ் மக்களுடைய சகல ஒத்துழைப்புகளுடனும் மாவீரர்களுக்காக அன்றைய நாளை நினைவு கூறுவதும் முக்கிய மானதாக காணப்படுகிறது” என்றார்.

கடந்த யுத்த காலங்களின் போது மாவீரர்களின் உறவுகளும் வடகிழக்கில் உடல் அவையவங்களை இழந்து, போராளிகளாகவும் பெரும் பொருளாதார கஷ்டங்களையும் எதிர் நோக்கி வருகின்றனர். இந்த மாவீரர் தினத்தில் அவர்களின் நினைவாக மரக் கன்றுகளை வழங்கு வது மட்டுமல்லாமல் அதற்கும் மேலாக பொருளாதார ரீதியாக முன்னேற்றமடையக் கூடிய வாழ்வாதார உதவிகளையும் வழங்குவது சிறப்பாகும்.

பல துன்ப துயரங்களை அனுபவித்த உறவுகள் எவ்வித வருமானமும் இன்றி பல கஷ்டங்களை எதிர்நோக்குவதை காண முடிகிறது. தமிழர் தாயகப் பரப்பில் உள்ள துயிலுமில்லங்கள் கடந்த கால அரசில் இராணுவ முகாமாகவும் காணப்பட்டது. இந்த நிலை வடக்கு கிழக்கில் தற்போது வரை தொடர்கின்றது.



இது குறித்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவிக்கையில் “மாவீரர் தினத்தை 2009க்குப் பின்னர் 15 வருடங்களாக மக்கள் நினைவு கூர்ந்து வரு கிறார்கள். எந்த அரசாங்கம் மாறி மாறி வந்தாலும் அதனை மக்கள் செய்வார்கள். கடந்த கால இக் கட்டான சூழ்நிலையிலும் கூட குறிப்பாக கோட்டாபாய, ரணில் விக்ரமசிங்க, மைத்திரி பால சிறிசேன, மஹிந்த ராஜபக்ச போன்ற ஜனாதிபதிக ளின் காலத்திலும் ஒவ்வொரு வருட மும் தடை உத்தரவுகளும் நீதிமன்றத்தால் தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. அப்போது எனக்கும் தடை உத்தரவு கிடைக்கப்பெற்றது. ஆனாலும் தற்போ தும் மாவீரர்களுக்கான அஞ்சலியை தொடர்ச்சியாக செய்து வந்தும் செய்யவும் உள்ளோம்.

இம்முறை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மௌனமாக இருக்கிறது. அதனை அவர்கள் விட்டுள்ளார்கள் என ஒன்றும் பெரிதாக நினைக்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே இக்கட்டான காலங்களில் செய்த மாவீரர் தினத்தை போன்று இம் முறையும் மக்கள் அதனை செய்வார்கள். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதை செய்யாமல் தடுத்தாலும் கூட அதனை பெரிதாக நினைக்காது நினைவேந்தலை செய்வோம். அவர்கள் தடை போட்டாலும் மக்கள் செய்வார்கள் அதுதான் யதார்த்தம்” என கூறினார்.



சிங்கள மக்களில் இடது சாரி கொள்கை கொண்ட JVP அவர்களின் கார்த்திகை தினத்தை கொழும்பில் மேடை போட்டு சகல உரிமைகளுட னும் பல்லாயிரக்கணக்கான மக்களை ஒன்று திரட்டி நினைவுப் பேருரைகளை செய்தனர்.

நாட்டின் சட்டம் அனைவருக்கும் சமம் என கூறும் இவர்கள், தமிழ் மக்களுடைய உணர்வு களையும் மதிப்பார்கள் என்பது எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.



ஒவ்வொரு துயிலுமில்லத்திலும் வீரச்சா வடைந்த மாவீரர்களுக்காக மெழுகுவர்த்திகளின் ஒளியில் மலர்ந்த கண்ணீர்த் துளிகள், அந்த வீரர்களின் தியாகத்துக்காக அந்த நாளில் நினைவுக ளாக அனுஷ்டிக்கப்படும்.

அன்றைய தினத்தில் வடகிழக்கு மக்கள் அமைதியாக நின்று அகவணக்கத்துடன் நினைவு கூர்வார்கள். சிலர் தம் உறவினர்களை நினைத்து மௌனமாக கண்ணீர் விடுவார்கள். இது போன்று தங்களை தாங்களே ஆற்றுப்படுத்தும் ஒரு நாளாக மாவீரர் தினம் காணப்படுகிறது.

மாவீரர் தினம் வெறும் நினைவு நாளல்ல — அது நம் வரலாற்றின் நெஞ்சில் நிறைந்த ஒரு உணர்வு. வீரமரணமடைந்தோர் விட்டுச் சென்ற பாதை இன்று இளைய தலைமுறைக்கு தன்னம் பிக்கை, அன்பு, மற்றும் அமைதி என்ற மூன்று ஒளி களாக விளங்குகிறது.

இந்த நாளில் உரிமைகளை அனுபவிக்க கூடிய வகையில் சுதந்திரமாக நினைவுபடுத்தலை மேற்கொள்ள எவ்வித தங்கு தடையுமின்றி ஒன்றிணைவோமாக.

• • •

# தொல்பொருள் ஆலோசனைக் குழுவா? சிங்கள பௌத்த ஆலோசனைக் குழுவா?

பா. அரியநேத்திரன்

கடந்த 2025 நவம்பர் 01ஆம் திகதி புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சர் ஹினிதும சுனில் செனவியால் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. அந்த வர்த்தமானி தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் தொல்பொருளியல் ஆலோசனைக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கான 19 பேர் அடங்கிய குழுவில் ஏனைய தேசிய இனங்களைச் சேர்ந்த ஒருவரேனும் உள்ளடக்கப்படவில்லை. இந்த குழுவின் பெயரை சிங்கள பௌத்த ஆலோசனைக் குழு என பெயரை மாற்றுவதே மிகப் பொருத்தமாக அமையும் இது இனவாதத்தின் வெளிப்பாட்டை மீண்டும் நிருபித்துள்ளது.

**அந்தக்குழுவில் உள்ளவர்:**


1. ஸ்ரீ ரெத்னபால மகாநாயக்க தேரர்.
2. டொக்டர் ஸ்ரீ சுமங்கல நாயக்க தேரர்.
3. டொக்டர் கல்விம விமல ரெட்ண தேரர்.
4. பேராசிரியர் பி.எம். மண்டவெல
5. பேராசியர் சேனாரட்ண திசநாயக்க
6. பேராசிரியர் லலித் வீரசிங்க
7. பேராசிரியர் கருண்ரெட்ண ஹெற்றியாராசி.
8. பேராசியர் மங்கல கடுபொல்ல
9. பேராசிரியர் ஆர் எம் எம் சந்திராரெட்ண
10. பேராசிரியர் மாலிங்க அமரசிங்க
11. பேராசிரியர் ராஜ் சோமதேவ
12. பேராசிரியர் சமித மன்னவடு
13. டொக்டர் திருமதி றோசி சொலங்க ஆராச்சி
14. டொக்டர் திருமதி ஹரியாணி சத்துருசிங்க
15. டொக்டர் விஜயரெட்ண வோகின்கமாவுவ
16. டொக்டர் வி டீ நங்கடேவா
17. டொக்டர் ஹாமினிவிஜயசூரியா
18. டொக்டர் அருண் ராஷபக்ஷ
19. ஹீமானந்த குமார வாலச்சந்ரா

03 பௌத்த பிக்குகள் 15 பேராசிரியர்கள், இவர்களில் இரண்டு பெண்கள் 01 சாதாரண உறுப்பினர் தொல்பொருள் ஆய்வுத் திணைக் களத்திற்கு இந்த ஆலோசனைக் குழுவில் தமிழ், முஸ்லிம் மருந்துக்கு கூட எவருமில்லை.



புத்த சாசனம், மதம் மற்றும் கலாச்சார விவகாரங்களுக்கான அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, தொல்பொருள் ஆய்வுத் திணைக் களத்துக்கான புதிய ஆலோசனைக் குழுவை நியமித்து விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.இந்த பெயர்கள் தெரிவு ஜனாதிபதி அனுரவுக்கும், ஜேவிபி பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவுக்கும் தெரியாமல் நடந்திராது என்பது உண்மை.

இதில் உள்ள பௌத்த துறவிகள் யார் என பார்த்தால் பொலன்னறுவை சொளொஸ்மஸ்தான ராஜமஹா விகாரையின் பிரதம விகாராதிபதியும், மஹா விகாரவம்ஷிக சியாமோபாலி மஹா நிகாயவின் அஸ்கிரி மஹா விகாரைப் பிரிவின் அனுநாயக்க தேரருமான வண. வெண்டருவே தர்மகீர்த்தி ஸ்ரீ ரத்னபால உபாலி நாயக்க தேரர் அவர்கள் இந்தக் குழுவின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.



தொல்லியல் என்ற பெயரில் அபகரிக்கப்பட்ட குறுந்தூர்மலை

வர்த்தமானி அறிவித்தலின்படி, இந்தக் குழுவின் பதவிக்காலம் 2025ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் திகதி முதல் 2027ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09ஆம் திகதி வரை இரண்டு ஆண்டுகள் நடைமுறையில் இருக்கும். ஜனாதிபதி விரும்பினால் மேலும் ஆண்டுகளை நீடிக்கலாம்.

கடந்த காலங்களிலும் பௌத்த, சிங்கள அடிப்படையைக் கொண்ட தொல்பொருள் திணைக்களத்தினாலேயே தமிழ் பேசும் மக்கள் வாழும் இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் காரணமாக பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்கள் கைப்பற்றப்பட்ட, தமிழ், சைவ ஆலயங்கள் அமைந்திருந்த இடங்களும் கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த இடங்கள் பௌத்த விகாரைகள் இருந்த இடங்களாக அபகரிக்கப்பட்டதாக குற்றச்சாட்டுக் கள் எழுந்திருந்தன.



தொல்லியல் என்ற பெயரில் அபகரிக்கப்பட்ட வெடுக்கு நாரி ஆதி சிவன்

“நாம் இலங்கையர்” என்ற தொனிப் பொருளில் எதிர்வரும் 2025, டிசம்பர்,12,13,14, மூன்று தினங்களும் இலங்கையில் உள்ள சகல இனமக்களையும் சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் மற்றும் மலையகமக்களையும், சகல மதங்களையும் பௌத்தம், இந்து, கத்தோலிக்க, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களையும் ஒரே மைதானத்தில் வரவழைத்து “நாம் இலங்கையர்” என்ற ஒரு நிகழ்வை நடத்த சகல இனமக்களும் இலங்கையர் என்ற சிந்தனையை ஊட்டும் மூளைச்சலவை நாடகமாக மூன்று நாட்கள் இந்த திருவிழா இடம்பெற தேசிய மக்கள் சக்தி அரசு திட்டம் இட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நாடகத்தில் சகல கலாசார, விளையாட்டு, உணவுப்பரிமாற்றம், சமயவணக்க நிகழ்வுகள், அனைத்திலும் இனமொழிமத பேதம் இன்றி நாம் இலங்கையர் ஒரே நாடு ஒரே தேசம் ஒரே மக்கள் என்ற உள் உணர்வை மாணவர்கள் இளைஞர்கள் மத்தியில் பரப்பும் சமத்துவமான நிகழ்சியாக இது இடம்பெறப்போகின்றது.

நாம் இலங்கையர் என்று ஒருபக்கம் கூறியபடி கூத்துக்காட்டும் அதே வேளை, இந்த தொல்பொருளியல் ஆலோசனை குழுவில் “நாம் சிங்களவர்” “நாம் பௌத்தர்கள்” என்பதையே இந்த நியமனம் மூலம் காட்டப்பட்டுள்ளது.

இந்த குழுவில் பெயருக்கு கூட ஒரு தமிழனும் இல்லை. இஸ்லாமியனும் இல்லை. இவ்வாறான இனவாத ஆட்சியாளர்களான தேசிய

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# பாதீட்டில் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒதுக்கீடு – உள்ளுக்குள் சிக்கல்

2026ஆம் நிதி ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் நிதி அமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் பாராளுமன்றில் முன்வைக்கப்பட்டு அதன் மீதான விவாதம் தற்போது இடம்பெற்று வருகின்றது. ஜனாதிபதி தனது வரவு செலவு திட்டத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பு தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளார். எனினும் தோட்ட தொழிலாளர்களின் வேதன அதிகரிப்புக்கான ஒதுக்கீடு தொடர்பாக தற்போது சர்ச்சை எழுந்துள்ளது.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் அடிப்படை வேதனம் 2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 1550 ரூபாய் வரை அதிகரிக்கப்படும் என்றும் அதற்கு மேலதிகமாக, வருகைக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவாக 200 ரூபாய் அரசாங்கத்தினால் வழங்கப்படும் என்று ஜனாதிபதி வரவு செலவு திட்ட உரையில் அறிவித்தார். அதற்கமைய பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கான வேதனம் 1750 ரூபா யாக அதிகரிப்படவுள்ளதாகவும் அவர் அறிவித்தார். அத்துடன் பெருந்தோட்ட நிறுவனங் களின் ஒப்பந்தங்கள் 2042 ஆம் ஆண்டுடன் நிறைவடையவுள்ளது.




அனைத்து நிறுவனங்களும் முறையாக அபிவிருத்தி செய்து, வரு மானத்தை அதிகரித்து, பெருந்தோட்ட மக்களுக்கு முறையான கொடுப்பனவை வழங்காவிடத்து, அவை அரசாங்கத்தினால் மீளப்பெறப்படும். 2042ஆம் ஆண்டுக்குப் பின்னர் எந்தவொரு நிறுவனத்தின் ஒப்பந்தமும் நீடிக்கப்படாது என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, பெருந்தோட்ட மக்களின் வேதன அதிகரிப்புக்காக 5000 மில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்தநிலையில் ஜனாதிபதி அறிவித்த வருகைக்கான கொடுப்பனவு தொடர்பில் தெளிவற்ற தன்மை காணப்பட்ட நிலையில் வரவு செலவு திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் போது அமைச்சர் வசந்த சமரசிங்க அது குறித்த விளக்கத்தை வழங்கியிருந்தார். பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிய வேதனம் கிடைக்காமையினாலேயே அவர்கள் பெருந்தோட்டங்களை விட்டு வெளியேறுவதாகவும் அவர் இதன் போது சுட்டிக்காட்டி இருந்தார்.

அதற்கமைய, தற்போது வழங்கப்படும் 1350 ரூபாய் அடிப்படை வேதனத்துடன், 200 ரூபாயினை அதிகரிப்பதற்கு பெருந்தோட்ட நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அதன்படி, ஒரு பெருந்தோட்டத் தொழிலாளியின் அடிப்படை வேதனம் 1550 ரூபாயாக அதி



கரிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், அரசாங்கத்தினால் தொழிலாளி ஒருவருக்கு வருகைக்கான கொடுப்பனவாக 200 ரூபாய் வழங்குவதற்காகப் பாதீட்டில் 5000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 200 வருட வரலாற்றைக் கொண்ட பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போதே உரிய வேதன அதிகரிப்பு கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். அதன்படி, தொழிலாளி ஒருவர் 25 நாட்களும் பணிக்கு சமுகமளித்தால் அரசாங்கத்தினால் வழங்கப்படும் வருகைக்கான கொடுப்பனவு 200 ரூபாயும் சேர்ந்து தொழிலாளி ஒருவருக்கு மாதத்துக்கு 10,000 ரூபாய் வேதன உயர்வு கிடைக்கும் என்றும் அமைச்சர் வசந்த சமரசிங்க தெளிவுபடுத்தினார்.

இதேவேளை, மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு, அரசாங்கம் அறிவித்தமைக்கு அமைய அடிப்படை வேதனமாக, 1,550 ரூபாயை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வழங்குவதற்கு முதலாளிமார் சம்மேளனம் இணக்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் கருத்துரைத்த முதலாளிமார் சம்மேளனத்தின் ஊடக பேச்சாளர் ரொஷான் இராஜதுரை, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு, அடிப்படை வேதனமாக 1,550 ரூபாய் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வழங்கப்படுமென தெரிவித்தார். அத்துடன், 200 ரூபாய் வருகைக் கொடுப்பனவு தொடர்பில் அரசாங்கத்துடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு விரைவில் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**சட்ட சிக்கலும் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பும்**

மருதன் ராம்

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான வேதனம் அதிகரிக்கப்படும் என அரசாங்கம் மற்றும் முதலாளிமார் சம்மேளனம் அறிவித்துள்ள நிலையில் அரசாங்கத்தின் ஒதுக்கீடுக்கு ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. குறிப்பாக, தனியார் தோட்ட நிறுவனங்களுக்குச் சொந்தமான தோட்டத் தொழிலாளர் ஒருவருக்கு ரூபா 200 வீதம் வழங்குவதற்காக பாதீட்டில் ரூபா 5 பில்லியன் ஒதுக்கப்பட்ட விடயத்தில் தலையிடுமாறு கையூட்டல் அல்லது ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மற்றும் கணக்காய்வாளர் நாயகம் ஆகியோரிடம் ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நிதி ஒதுக்கீடு சட்டவிரோதமானதா? என்பதை ஆராயுமாறு அவர் இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் கடிதம் எழுதியுள்ளார். தோட்டத் தொழிலாளர்களைப் பராமரிப்பது ஒரு தேசிய முன்னுரிமை என்று அவர் வலியுறுத்தியுள்ளார். எனினும், முக்கிய தோட்ட நிறுவனங்களில் சேராத சுமார் 40,000 தொழிலாளர்கள் இந்த யோசனையின் கீழ் உள்ளடக்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.



இந்த நிதி ஒதுக்கீடு, குறிப்பிட்ட சில முக்கிய நிறுவனங்களின் கீழ் உள்ள தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நன்மைக்காக மட்டுமே செய்யப்பட்டது என்றும் அவர் வாதிட்டார். இந்த வகையில் தனியார் துறை ஊழியர்களின் நலனுக்காக, திரட்டப்பட்ட நிதியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது என்றும் அவர் தனது வாதத்தை முன்வைத்துள்ளார்.

இதேவேளை, நாட்டின் பாதீட்டு முன்மொழிவுக்கமைய, பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 200 கொடுப்பனவை அரசாங்கம் வழங்குவது சட்டப்படியாகுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

தொடர்ச்சி 17ஆம் பக்கம்



# நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்...

நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம்
நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம்
பணிவோமல்லோம்...

என்கிறது திருநாவுக்கரசரின் தேவாரம். அதற்கு, வார்த்தைக்கு வார்த்தை இலக்கணமாய்த் திகழ்ந்தவர்கள், தமிமீழத் தாய்மண்ணில் நேர்பட வாழ்ந்து வீரத்தோடு போராடி மடிந்த ஈடு இணையற்ற மாவீரர்கள்.

எவர் ஒருவருக்கும் யாம் அடிமைகளில்லை... எவனிடமும் கெஞ்சுவதில்லை, எமனுக்கும் அஞ்சுவதில்லை... பொய்யும் புரட்டும் எம்மை அணுகுவதில்லை...

என்கிற திருநாவுக்கரசரின் பிரகடனம்தான், விடுதலைப்புலிகளின் அறம்சார் நெறியாக நிலைத்திருந்தது. அதனால்தான், இன அழிப்புப் பகைவருக்கு அடிபணிந்து பிழைத்திருந்தோரைக் கொண்டாடாமல், விதையாய் வீழ்ந்த மாவீரர்களைக் கொண்டாடுகிறது தமிழினம்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் திருப்பு முனையாக இருந்தவர், காந்தி. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை உலுக்கிய ஒரு மிகப்பெரிய போராட்டத்தையே, சௌரி சௌராவில் நடந்த அசம்பாவி தங் களுக் குப் பின் நிறுத்தி விடுகிற அளவுக்கு ‘அறம்’ மிகுந்திருந்தது அவரது அரசியல் முடிவுகளில்!



வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும், மோகன்தாஸ் கரம்சந்த் காந்திக்கும் விடுதலைப் போராட்டத்துக்கான ஆயுதங்கள் வெவ்வேறாக இருந்தாலும், அரசியல் அணுகுமுறை ஒரே மாதிரிதான் இருந்தது.

சிங்கள ராணுவ முகாம் ஒன்றை வீழ்த்திய மகிழ்ச்சியில் இலங்கை தேசியக் கொடியைக் கொளுத்திய போராளிகளைக் கடுமையாக கண்டிக்கிற அரசியல் நேர்மை பிரபாகரனிடம் இருந்தது. ஆனையிறவு முகாம் என்கிற இரும்புக் கோட்டையைத் தகர்த்த அடுத்த கணமே, சமாதானத்தை ஏற்கும் பேராண்மையும் இருந்தது. ஆக, காந்தியும் பிரபாகரனும், விடுதலைப் போராட்டம் என்கிற ஒரே நூல் கண்டின் வெவ்வேறு முனைகள். இரண்டு பேருமே, திருப்புமுனைகள்.

இன்று மாவீரர்களாய்த் திகழும் விடுதலைப்புலி வீரர்கள் ஒவ்வொருவரும் பிரபாகரனைப் போலவே இருந்ததுதான், வியக்க வைக்கிறது. 1987ஆகஸ்டில், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி, விடுதலைப்புலிகள் தங்கள் ஆயுத



புகழேந்தி தங்கராஜ்

ங்களை ஒப்படைப்பார்களா -என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாக இருந்தது. ஆயுதங்களை ஒப்படைக்கச் சம்மதித்து, அந்தக் கேள்விக்குறியை ஆச்சரியக் குறியாக்கிய வர் பிரபாகரன். அது, ‘நாங்கள் போர் வெறியர்க ளில்லை’ என்று உலகுக்கு அறிவித்த அரிதினும் அரிதான தருணம். போர் அவர்கள் மீது திணிக்கப்பட்டது என்பதுதான் உண்மை.

இலங்கைக்கு, பல்வேறு நாடுகள் மானாவாரியாகஆயுதம்கொடுத்தன. புலிகளோ, கொஞ்சம் நஞ்சம் ஆயுதங்களைக் கொண்டு வரவே உயிரைக் கொடுக்க வேண்டியிருந்தது. பெரும்பாடுபட்டு கொண்டு வந்த ஆயுதங்களை ஒப்படைப்பதில் தங்களுக்கு உடன்பாடில்லை என்பதை, புலிகளின் தளபதிகள், பிரபாகரனிடமே வெளிப்படையாகத் தெரிவிக்கும் அளவுக்கு, எந்த இயக்கத்திலும் இல்லாத ஜனநாயகம் புலிகள் இயக்கத்தில் இருந்தது. அதே சமயம், இயக்கம் சொல்வதை ஏற்க வேண்டும் - என்கிற கட்டுப்பாடும் இருந்தது. அதனால்தான், ஒப்படைப்பு நிகழ்ச்சியில் தனது மௌசர் துப்பாக்கியை, இலங்கை ராணுவத் தலைவரின் கையில் கொடுக்காமல் மேஜையில் வைத்தான் மாவீரன் யோகி.

பிரபாகரனைப் போலவே, பிரபாகரனின் தோழர்களும் நுணுக்கமான அறிவுத்திறனுடன் இருந்ததையே இது காட்டுகிறது. எந்த நிலையிலும் தன்மானத்தை விட்டுக் கொடுக்கவில்லை. அந்த மாவீரர்கள். அதனால்தான் அந்த மாவீரர்களை நினைத்து நினைத்து நெகிழ்ந்து போகிறோம்.

மாவீரர்களாகவே வாழ்ந்து முடிவதும், மாவீரர்களாய்க் காட்டிக் கொள்வதற்காகவே சாமர்த்தியமாக வாழ்வதும் ஒன்றல்ல! அது வேறு, இது வேறு. சுவரொட்டிகள், பேனர்கள் மூலமாகவே தங்களை மாவீரர்களாகக் காட்டிக் கொள்ள முயல்கிற தலைவர்கள் மலிந்துவிட்ட தாய்த் தமிழகத்திலிருந்து, அந்த வெட்டி பந்தா வீரர்களை வேடிக்கை பார்க்கிற ஒரு சராசரி தமிழன் என்கிற முறையில், இதை வேதனையுடன் குறிப்பிட வேண்டியிருக்கிறது.



மில்லரும், அங்கயற்கண்ணியும், ஆயிரமாயிரம் மாவீரர்களும், தங்களுக்கு விளம்பரம் தேடிக் கொள்வதற்காக உயிரைக் கொடுத்தவர் களல்ல! தாய்மண்ணின் விடுதலைக் கான கடமையை எந்தப் பிரதிபலனையும் எதிர்பாராமல் தான் செய்து முடித்தார்கள்.

‘அபித’ என்கிற நாசகார கப்பலைத் தகர்ப்பதற்காக ஒரு ஆகஸ்ட் 15ம் தேதி மாலை கடலில் நீந்தத் தொடங்கிய கயல், தன்னுடன் இணைந்து நீந்திய தோழிகளை ‘இது என்னுடைய *assignment*... திருப்பிப் போங்கோ’ என்று விரட்டியது வரலாறு. அதேதான் நெல்லியடியிலும் நடந்தது. தடைகளை நீக்க ஜீப்புடனேயே ஓடிவந்த பிரபு கடைசி நொடியில் ஜீப்பில் ஏறிக்கொண்ட போது, ‘இது என்னுடைய பணி, இறங்கு’ என்று கூறி தள்ளிவிட்டு விட்டுத் தன் உயிரை மட்டுமே அர்ப்பணித்தவன் மில்லர்.

என்னவொரு ஒழுக்கம், என்னவொரு கட்டுப்பாடு... இதுதான் அவர்கள் ஒவ்வொருவரையும் ‘மாவீரர்’ என்கிற தகுதிக்கு உயர்த்தியது.

‘ஹமாஸ்’ போன்ற விடுதலைப் போராட்ட அமைப்புகளின் நடவடிக்கைகளையும் செயல்பாடுகளையும் பார்க்கும் போதுதான், தன்னடக்கத்தோடும், மெய்யடக்கத்தோடும் தமிழீழ

தொடர்ச்சி 16ஆம் பக்கம்




# மாவீரர் நாள் எண்ணங்கள்

## தமிழ்நாட்டின் சுணக்கம் களைய...

*"மாவீரச் செல்வங்கள்*
*மண்கிழித்து வெளிவந்து*
*சாவீரச்செய்தி சாற்றி*
*உறவுரைத்துப் பேசும் நாள்"*

**கவிஞர் புதுவை இரத்தினதுரை.**

இந்த ஆண்டும் நவம்பர் 27ஆம் நாள் தாயகத்திலும் புலம்பெயர் தமிழுலகிலும் மாவீரர் நாள் சுடரேந்தும் போது தமிழ்நாட்டிலும் ஏதோ ஒரு வகையில் அந்நிகழ்வு நடந்து விடும். ஈழத் தோழமை இயக்கங்கள், அமைப்புகள் அந்தக் 'கடமையை' மறவாமல் செய்து விடும்.

ஆனால்- 2009 முள்ளிவாய்க்கால் இனவழிப்புக்கு முன்னும் அடுத்த சில ஆண்டுகளி லும் கண்ட அந்த உணர்வும் ஊக்கமும் குன்றிக்கொண்டே போவதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். தமிழக மக்கள் எடுக்கும் எழுச்சியான நிகழ்ச்சியாக இல்லாமல் சில கட்சிகளின் கடன் கழித்தலாகவே இந்த எழுச்சி வற்றிப் போய்க் கொண்டிருக்கிறது.

ஏன்? எப்படி? உலகில் தமிழர்களின் முதற் பெரும் தாயகம் ஏன், எப்படி இவ்வாறு தாழ்ந்து போனது? தமிழ்நாட்டு மக்கள் தமிழீழ விடுதலையை உணர்ச்சி பொங்க ஆதரித்த காலம் மலையேறி விட்டதா? இந்தச் சுணக்கம் அல்லது சரிவுக்கு யார் பொறுப்பு? இனியும் தமிழ்நாட்டைத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பின்தளமாகக் கருத முடியாதா?

1980களில் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் தமிழீழ விடுதலையைப் போட்டிபோட்டுக் கொண்டு ஆதரித்ததை மறக்க முடியாது. டெசோ மாநாடு நடத்தப்பட்டது. ஈழத்துப் படுகொலைகளைக் கண்டித்துத் தலைவர்கள் கறுப்புச் சட்டை அணிந்தார்கள். சிலர் பதவி துறக்கவும் செய்தனர். ஈழ விடுதலைக்கு இந்திய அரசு உதவக் கோரி மறியல் போர்கள் நடபெற்றன. ஈழப் போராளிகளுக்கு ஆயுதம் கொடுக்கச் சிலர் கோரினர். இந்தியப் படையை அனுப்பி வையுங்கள் என்றனர் வேறு சிலர். மெய்யாகவே இந்தியப் படை அனுப்பப்பட்ட போது எதிர்க்க வேண்டியதாயிற்று.

1983 யூலைப் படுகொலை தமிழ்நாட்டில் பேரதிர்வுகளைத் தோற்றுவித்தது. வெலிக்கடை சிறைக் கொலைகளை எதிர்த்துத் தமிழ்நாட்டுச் சிறைகளில் போராட்டம் வெடித்தது (நான் அப்போது சிறையிலிருந்தேன்). 1965இல் 'இந்தி அரக்கிக்கு' எதிராகப் போராடிய தமிழ்மக் கள் இப்போது 'சிங்கள அரக்கனுக்கு' எதிராகப் போராடினார்கள். 1967க்குப் பின் மங்கிய இனவுணர்வு இப்போது மீண்டும் பொங்கியெழுந்தது.

1983க்குப் பின் ஈழத்தில் கருவிப் போராட்டம் வளர வளர விடுதலைப் புலிகளின் கை ஓங்கிற்று. தமிழ்நாட்டில் வீடுதோறும் தம்பி (பிரபாகரன்) நேசத்துடன் உச்சரிக்கப்படும் பெயராயிற்று. தளபதிகள் (அன்பு அம்மான்கள்) வாஞ்சையுடன் போற்றப்பட்டார்கள். ஊர் தோறும் ஈழத்து சோகமும் வீரமும் கண்காட்சிகளாயின. ஈழ மக்களின் துயரத்தை உணர்த்த 'இரத்தக்கட்டு' ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. தோழமைக் கழகங்கள் நிறுவப்பட்டுப் பரப்புரை செய்யப்பட்டது.

ஈழம் விரைவில் மெய்ப்படும் என்ற நம்பிக்கை துளிர்த்தது. ஈழக் குடியரசு மலரும் நாளில் யாருக்கு முதல் மரியாதை, யாருக்கு இரண்டாம் மரியாதை என்ற சுவையான விவாதங்கள் கூட நடைபெற்றன.

"விடுதலை அரசியலின் நீட்சிதான் விடுதலைப் போர்!" என்ற புரிதல் குறைந்து போருக்காகவே போர் என்ற ஆர்வத் துடிப்பு வளர்ந்தது. விடுதலை அரசியலின் உள்நாட்டு, வெளிநாட்டுப் பரிமாணங்களும் அவற்றில் ஏற்பட்ட திருப்பங்களும் உரியவாறு கணக்கில் கொள்ளப்படவில்லை.

விடுதலை அரசியல் என்பது முதலாவதாக விடுதலையை உயிர்த் தேவையாகக் கொண்ட

**தோழர் தியாகு**
பொதுச்செயலாளர், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

மக்களை மென்மேலும் விரிவாகவும் உறுதியாகவும் அணிதிரட்டுவதைக் குறிக்கும். இரண்டாவதாக நட்பு ஆற்றல்களை ஆதரவாகச் சேர்த்துக் கொள்வதைக் குறிக்கும். மூன்றாவதாக படுமோசமான பகையை அறவே தனிமைப்படுத்தி அழிப்பதைக் குறிக்கும். நான்காவதாக பகையைப் பிளவுபடுத்தி ஒரு பகுதியை முடக்குவதை– செயலிழக்கச் செய்வதை – குறிக்கும்.

வியத்நாம் விடுதலைப் போர் வரலாறு இவ்வாறான விடுதலை அரசியலுக்கு ஒரு பாடப்புத்தகம் போன்றது. சீனத்தில் உள்நாட்டுப் போர், சீன வன்பறிப்புக்கு எதிரான போர், இறுதியான விடுதலைப் போர் என்று ஒவ்வொரு கட்டமாக மாறி வந்த பாதையில் மாவோவும் சீனப் பொதுமைக் கட்சியும் சீன மக்களை வழிநடத்திய முறை சிறந்த வரலாற்றுப் பாடங்களைக் கொண்டு மிளிர்கிறது.

வெற்றி பெற்ற போராட்டங்கள் போலவே தோல்வியுற்ற போராட்டங்களும் வளமான படிப்பினைகளைத் தாங்கி நிற்கவே செய்கின்றன.

அரசியலுக்கும் ஆய்தத்துக்குமான இயங்கியல் உறவை மாவோ "அரசியல் ஆணையிட வேண்டும்" என்று சுருக்கமாக வரையறுத்தார். ஆய்தம் அரசியலுக்கு ஆணையிடும் நிலை ஏற்படக் கூடாது. அரசியல் வெற்றிகளுக்காகப் போரியல் தோல்விகளை ஏற்க வேண்டி வரலாம். ஆனால் போரியல் வெற்றிகளுக்காக அரசியல் தோல்விகளை ஏற்கும் நிலை வரலாகாது.

ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் அரசியல் ஆய்தத்துக்கு ஆணையிட்ட அழகான தருணங்கள் உண்டு. வட்டுக்கோட்டையும் திம்புவும் சுதுமலைத் திடலும் இதற்குச் சான்றுகள். இவை தமிழீழ வரலாற்றில் வெற்றிச் சின்னங்கள். யாழ் கோட்டைக்கும் அளம்பில் காட்டுக்கும் ஆனையிறவுக்கும் முல்லைத் தீவுக்கும் கிளிநொச்சிக்கும் கட்டுநாயகாவுக்கும் நிகரான வெற்றிச் சின்னங்கள். முன்னவை இன்றேல் பின்னவை இல்லை.

மொத்தத்தில் தமிழ்நாட்டின் தமிழீழ ஆதரவு இயக்கம் போரியல் வெற்றிகளைக் கொண்டாடியது போல் அரசியல் வெற்றிகளைக் கொண்டாடத் தவறி விட்டது. போரியல் தோல்விகள் வந்த போது அவற்றுக்கான அரசியல் காரணங்களைத் தேடிக் கண்டறியாததால் சோர்வுக்குள் வீழ்ந்தோம்.

விளையாட்டுப் போட்டிகளை பார்த்துச் சுவைக்கிற சுவைஞர்களாகவே நம் மக்களை மாற்றி வைத்திருந்தோம். ஒரு விடுதலைப் போராட்டத்தை விடுதலைப் போராட்டமாகப் புரிந்து கொண்டு ஆதரிக்க விடாமல் வீரநாயக வழிபாடு தடையிட்டது என்பதும் உண்மை தான். வரலாற்றிலிருந்தும் வரலாற்று நாயகர்களிடமிருந்தும் கற்றுக் கொள்வதை விடவும் பக்தி மயக்கத்தில் ஊறிக் கிடப்பதே ஊக்கி வளர்க்கப்பட்டது.

ஈழ விடுதலைப் போராட்டம் இன்று இனவழிப்புக்கு நீதி கோரும் போராட்டமாக உருவெடுத்துள்ளது. புவிசார் அரசியல் உள்ளிட்ட அரசியல் பார்வை இல்லாமல் இந்தப் போராட்டத்தை விளங்கிக் கொள்ளவே முடியாது. புதிய சூழல்களைப் புரிந்து கொள்வதிலான இடைவெளியை நம்பமுடியாத புனைகதைகளைக் கொண்டு நிரப்பும் முயற்சி தோல்வி காணாமலிருக்க முடியாது.

மக்களிடம் அறிவார்ந்த அரசியலைப் புகட்டுவதற்கு எளிய மாற்று எதுவுமில்லை. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றுத் தேவையைத் தெளிவாகவும் தீர்க்கமாகவும் உணர்த்திக் கொண்டே, உடனடிக் கோரிக்கைகளுக் கான போராட்டத் தில் எல்லாக் களங்களிலும் எல்லா வகையிலும் நம் ஆற்றல்களைத் திரட்டி நிறுத்த வேண்டும். வெற்றிகளிலிருந்து ஊக்கம் பெறவும் தோல்விகளிருந்து பாடம் பெறவும் போற்றுதலுக்குரிய நம் மாவீரர்கள் வழிகாட்டுவார்கள்.

தலைவர்கள் மக்களை வழிநடத்துவதற்கு மாறாக மக்களால் வழிநடத்தப்படுவதுதான் தமிழ் நாட்டில் தமிழீழ ஆதரவுப் போராட்டத்தின் நெடுங்கால மரபு. தலைவர்களுக்காகக் காத்திருந்து காலத்தை வீணாக்க வேண்டாம். மக்களை அணியமாக்குவோம். போட்டிபோட்டுக் கொண்டு தலைவர்கள் வருவார்கள்.

• • •



## படைவலுச் சமநிலை மாற்றத்தை உறுதிப்படுத்திய

# செங்கோட்டைத் தாக்குதல்

கடந்த திங்களன்று(10) டெல்லியில் உள்ளே நடந்த செங்கோட்டை குண்டுவெடிப்பு ஒரு பயங்கரவாத தாக்குதல் என்று இந்திய அரசு 3 நாட்களின் பின்னர் அறிவித்துள்ளது. இந்த தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 20 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்தியாவின் செய்தியை அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் மார்கோ ரூபியோ உடனடியாகவே உறுதிப்படுத்தியதுடன் “இது தெளிவாக ஒரு பயங்கரவாதத் தாக்குதல் அதிக வெடிக்கும் பொருட்கள் நிரப்பப்பட்ட ஒரு கார் வெடித்துள்ளது” என்று தெரிவித்துள்ளார். இந்த சம்பவம் குறித்து ரஷ்யாவும் மிகுந்த எச்சரிக்கையை வெளிப்படுத்தியுள்ளது, மேலும் பயங்கரவாத அச்சுறுத்தலை திறம்பட எதிர்கொள்வதில் சர்வதேச சமூகத்தின் ஒற்றுமையை வலியுறுத்தியுள்ளது.



அதேசமயம், டெல்லியில் தாக்குதல் நடைபெற்ற 24 மணிநேரத்தில் பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள மாவட்ட நீதிமன்ற வளாகத்திற்கு வெளியே நடந்த தற்கொலை குண்டுவெடிப்பு தாக்குதலில் குறைந்தது 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்லாமாபாத் குண்டுவெடிப்பை நாட்டில் சமீபத்தில் நடந்த பிற தாக்குதல்களுடன் தொடர்பு படுத்தி, அவை “இந்திய அரசு பயங்கரவாதத்தின்” மோசமான எடுத்துக்காட்டுகள் என்றும். “இந்தியாவின் இத்தகைய தீய சதிகளைக் கண்டிக்க” உலக நாடுகளுக்கும் பாகிஸ்தான் பிரதமர் ஷேபாஸ் ஷெரீப் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஷெரீப்பின் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்த இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால், ஆதாரமற்றது மற்றும் தனது சொந்த மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப இந்தியாவுக்கு எதிராக தவறான கதைகளை இட்டுக்கட்டுவது ஒரு கணிக்கக்கூடிய தந்திரமாகும் என்று மறுத்திருந்தார்.

ஆனால் இந்தியாவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பை முதலில் எரிவாயு சிலிண்டர் வெடித்ததாக மறைக்க முற்பட்ட இந்திய அரசு பின்னர் குண்டு வெடிப்பு என ஏற்றுக்கொண்டிருந்தது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அமைச்சரவை புதன்கிழமை நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தில், இந்தச் செயல் “தேச விரோத சக்திகளால்” நடத்தப்பட்டதாகக் தெரிவித்துள்ளது.

அதாவது பாகிஸ்தான் தனது தலைநகரில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்கு இந்தியா தான் காரணம் என உடனடியாக கூறியபோதும், இந்தியா வழமைபோல எல்லாவற்றிற்கும் பாகிஸ்தான் தான் காரணம் என குற்றம் சுமத்தும் வழமையான வரலாற்றில் இருந்து மாறி ஒரு புதிய யுகத்திற்குள் நுழைந்துள்ளதையே இது காட்டுவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ஏப்ரல் மாதத்தில், ஜம்மு காஷ்மீரில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டனர், அப்போது உடனடியாக பாகிஸ்தானை குற்றம் சுமத்திய இந்தியா உடனடியாகவே பாகிஸ்தான் மீது ஒரு தலைப் பட்சமாக தாக்குதலையும் நடத்தியிருந்தது. அதன் பின்னர் அது போராக மாற்றம் பெற்று இறுதியில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்றம்பின் தயவால் முடிவுக்கு வந்த வரலாற்றை நாம் அறிவோம்.

அதன் பின்னர், எதிர்காலத்தில் நடைபெறும் எந்தவொரு பயங்கரவாதத் தாக்குதல்களும் “ஒரு போர் நடவடிக்கை” என்று கருதப்படும் என்று அதிகாரப்பூர்வமாகக் கூறியுள்ள புது தில்லி, திங்கட்கிழமை நடந்த தாக்குதலுக்கு இஸ்லாமாபாத்தை அதிகாரப்பூர்வமாக குற்றம் சாட்டவில்லை.

எங்கோயோ தொலைவில் இருந்த கஸ்மீரில் இடம்பெற்ற ஒரு தாக்குதலுக்கு உடனடியாகவே பதில் தாக்குதலை மேற்கொள்ள முனைந்த இந்தியா, தனது உயர் பாதுகாப்பு வலையத்தில் உள்ள 17 ஆம் நூற்றாண்டு பழமை வாய்ந்த செங்கோட்டைக்கு அருகில் இடம்பெற்ற தாக்குதலை மறைக்க முற்றட்டுள்ளதுடன், அதனை இந்தியாவுக்கு எதிரான சக்திகளின் நடவடிக்கை என அடக்கி வாசிக்கின்றது.



செங்கோட்டை என்பது அரசியல், இராஜதந்திர மற்றும் பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தது. அங்கு அதிக சுற்றுலாப்பயணிகள் வருவதால் அது பொருளாதார முக்கியத்துவம் கொண்டது. அதே சமயம், இந்திய சுதந்திர தினத்தில் ஒவ்வொரு பிரதமர்களும் அங்கு தான் உரையாற்றுவதும் உண்டு. அதாவது இது இந்தியாவின் இதயத்தில் இடம்பெற்ற தாக்குதலாகவே பார்க்கப்படலாம்.

ஏனினும் இந்தியாவின் மாற்றத்துக்கு என்ன காரணம் என பலரும் கேட்கும் கேள்விக்கான

வேல்ஸில் இருந்து **அருஸ்**

காரணத்தை அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியில் இடம்பெற்ற நேர்காணல் ஒன்றில் நான் தெளிவாகவே சொல்லியிருந்தேன். அதாவது கடந்த மே மாதம் இடம்பெற்ற இந்திய - பாகிஸ்தான் போரில் பாகிஸ்தானின் படைத்துறை வலிமையை குறைவாக மதிப்பிட்டதன் பயனை இந்தியா அறுவடை செய்திருந்தது. அந்த போரில் இந்திய வான் படை பயன்படுத்திய உலகின் மிக முக்கிய முன்னனி 6 போர் விமானங்களை ஒரு இரவில் இழந்திருந்தது. இந்தியா தொடர்ந்து மறுத்தபோதும், அமெரிக்க அதிபர் ட்றம்பும் இந்த இழப்புக்களை உறுதிப்படுத்தியிருந்தார்.



அந்த போரில் பயன்படுத்தப்பட்ட சீனாவின் 4.5 ஆம் தலைமுறை J10-C போர் விமானமும், பி.எல்-15 வான் தாக்குதல் ஏவுகணையும் இந்திய வான்படையினதும், நேட்டோவின் முன்னணி நாடான பிரான்ஸின் ரபேல் விமானத்தின் வான் அதிகத்தையும் ஒரு இரவில் முறியடித்திருந்தது.

அன்றையே போரில் இந்தியா பயன்படுத்திய நவீன ஆயுதங்களுக்கு அப்பால் இந்தியாவிடம் அணுக்குண்டுகளை தவிர வேறு எந்த ஆயுதமும் இல்லை. ஆனால் அந்த அணுக்குண்டுகள் பாகிஸ்தானிடமும் உள்ளது. மேலும் பாகிஸ்தான் போர்க்களத்தை ஒருங்கிணைக்கும் சீனாவின் தொழில்நுட்பம் அமெரிக்க படையினருக்கே சவால்விடும் நிலையில் உள்ளது இந்த நிலையில் அதனை எதிர்கொள்வது என்பது இந்தியாவால் முடியாத காரியம்.

மேலும் இந்திய - பாகிஸ்தான் போருக்கு பின்னர்சீனாவின்ஆயுதங்களுக்கானவிளம்பரங்கள் அதிகரித்தது ஒருபுறம் இருக்க, பாகிஸ்தானின் இராணுவத்தளபதியை இரண்டு முறை அழைத்து விருந்து வைத்திருந்தார் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்றம்ப், அது மட்டுமல்லாது சவுதி அரேபியாவுக்கும் பாகிஸ்தானுக்கு இடையில் இந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட மூலோபாய படைத்துறை மற்றும் பொருளாதார உடன்பாடு என்பது இந்தியாவின் கைகளை கட்டிப் போட்டுள்ளது.

இந்தியாவின் இந்த தயக்கத்திற்கு அதன்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## ஈழத்து துயிலும் . .. தொடர்ச்சி ...

மட்டுமே 2008 இறுதிவரை இருந்தது. ஆனால் போர் உக்கிரமான போது அமைக்கப்பட்ட மாவீரர் துயிலுமில்லங்கள் மேலும் ஆறு துயிலும் இல்லங் கள் அமைக்கவேண்டிய நிலை ஏற்பட்டது அதனால்

28)தர்மபுரம் துயிலுமில்லம்,
29)சுதந்திரபுரம் துயிலுமில்லம்.
30இரணைப்பாலை துயிலுமில்லம்.
31)பச்சைப்புல்வெளி துயிலுமில்லம்.
32)கரையா முள்ளிவாய்க்கால் துயிலுமில்லம்.
33)வெள்ளா முள்ளிவாய்க்கால் துயிலுமில்லம்.

ஆகிய ஆறு துயிலும் இல்லங்களும் 2008, தொடக்கம் இறுதிப்போர் 2009, மே,18 வரை அமைக்கப்பட்டன. எல்லாமாக மொத்தம் 33, துயிலும் இல்லங்களில் இதுவரை ஏறக்குறைய ஐம்பதாயிரம் மாவீரர்களின் கல்லறைகள் உள்ளதாக கூறப்படுகிறது.

2005ல் விடுதலைப்புலிகளால் உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்ட துயிலும் இல்லங்களில் உள்ள கல்லறைகள் விபரம்.

**வடமாகாணம்:**
1)விசுவமடு – 2728. கல்லறைகள்.
2)முள்ளியவளை – 2575,கல்லறைகள்.
3)கிளிநொச்சி – 1963 .கல்லறைகள்.
4)வன்னிவிளாங்குளம் – 856 .கல்லறைகள்.
5)ஆலங்குளம் – 663 .கல்லறைகள்.
6)முழங்காவில் – 959 .கல்லறைகள்.
7)ஆட்காட்டிவெளி – 660 .கல்லறைகள்.
8)பண்டிவிரிச்சான் – 272 .கல்லறைகள்.
9)அளம்பில் – 147 .கல்லறைகள்.
19)உடுத்துறை – 214 .கல்லறைகள்.
11)கோப்பாய் – 1832 .கல்லறைகள்.
12)சாட்டி – 154 .கல்லறைகள்.
13)கொடிகாமம் – 968 .கல்லறைகள்.
14)எள்ளங்குளம் – 795 .கல்லறைகள்.
15)ஈச்சங்குளம் – 707 .கல்லறைகள்.
16)மணலாறு – 81 .கல்லறைகள்.
17)டடிமுகாம் – 90 .கல்லறைகள்.

**கிழக்குமாகாணம்:**
18)தரவை, மட்டக்களப்பு-2452 .கல்லறைகள்.
19)தாண்டியடி,மட்டக்களப்பு-485.கல்லறைகள்.
20)கண்டலடி வாகரை,மட்டக்களப்பு – 284.கல்லறைகள்.
21)மாவடி முன்மாரி, மட்டக்களப்பு–62.கல்லறைகள்.
22)கஞ்சிகுடிச்சாறு, அம்பாறை-686.கல்லறைகள்.
23)ஆலங்குளம், திருகோணமலை-262.கல்லறைகள்.
25)பெரியகுளம், திருகோணமலை– 65.கல்லறைகள்.
26)தியாகவனம், திருகோணமலை – 35.கல்லறைகள்.

மொத்தம் இருபதாயிரம் (20000) கல்லறைகள். (விடுதலைப்புலிகள் மாவீரர் பணிமனையால் 2005,நவம்பரில் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில் இருந்து பெறப்பட்டவை).

2005, கார்த்திகை27, தொடக்கம் 2009,மே,18, வரை மாவீரர்களின் உத்தியோகபூர்வ விபரம் தெரியாவிட்டாலும் ஏறக்குறைய முப்பதாயிரம் மாவீரர்கள் இந்த நான்கு வருடங்களில் வீரமரணம் அடைந்திருக்கலாம் என நம்பப்படுகிறது..

இதேவேளை தற்போதும் பத்து துயிலும் இல்லங்களில் இராணுவமுகாம்கள் உள்ளன. அவை..

**மட்டக்களப்பு மாவட்டம்:**
தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லம்.

**யாழ்ப்பாணம் மாவட்டம்:**
கொடிகாமம் துயிலும் இல்லம்,
எள்ளாங்குளம் துயிலும் இல்லம்,
கோப்பாய் துயிலும் இல்லம்

**வவுனியா மாவட்டம்:**
ஈச்சங்குளம் துயிலும் இல்லம்

**முல்லைத்தீவு மாவட்டம்:**
தேராவில் துயிலும் இல்லம்,
முள்ளியவளை துயிலும் இல்லம்
அடம்பன் துயிலும் இல்லம்,
துணுக்காய் துயிலும் இல்லம்,
ஆலங்குளம் துயிலும் இல்லம்.

கடந்த 15 வருடங்களாக துயிலும் இல்லங்களில் நினைவுகள் செய்வதற்கு பூரணமான அனுமதி இருக்கவில்லை நல்லாட்சி அரசின் காலத்தில் துயிலும் இல்லங்களில் நினைவுகூர அனுமதி உண்டு என பிரதமர் ரணில் ஜனாதிபதி மைத்திரி கூறியபோதும் சில துயிலும் இல்லங்களில் படையினர் தடுத்து கெடுபிடி செய்த வரலாறே காணப்பட்டது.

நீதிமன்ற தடை உத்தரவுகள் மஞ்சள் சிவப்பு கொடிகட்டவிடாமல் தடுத்த சம்பவங்கள் எல்லாம் கிழக்கில் உள்ள குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ஏற்பட்டன.

ஆனால் என்னதான் தடைகள் இராணுவ அச்சுறுத்தல்கள் இருந்தபோதும் அவைகளுக்கு முகம் கொடுத்து கிழக்கு மாகாணத்தில் துயிலும் இல்லங்களில் நினைவுச்சுடர்கள் கார்த்திகை 27, மாலை 6.5, மணிக்கு ஏற்றப்பட்டதே வரலாறு.

எதிர்வரும்2025, நவம்பர்,27, ல்தற்போதைய தேசிய மக்கள்அரசு அனுமதிதந்தாலும் தராவிட்டாலும் துயிலும் இல்லங்களில் நினைவுச்சுடர்கள் வழமை போன்று ஏற்றப்படும்.

ஆனால் அமைச்சர் சந்திரசேகரம் மாவீரர்களை நினைவு கூர தடையில்லை என கூறியுள்ளார். இனப்படுகொலைக்காக உயிர்நீத்த பொது மக்கள், இனவிடுதலைக்காக போராடி ஆகுதியான மாவீரர்கள் அனைவரையும் அந்தந்த தினங்களில் நினைவுகூருவது எல்லாத்தமிழர்களுடைய கடமை யும் உணர்வும் இதற்கு எவரிடமும் அனுமதி பெறத்தேவையில்லை குறிப்பாக ஆட்சியாளர்களி டம் அனுமதி எதிர்பார்த்து கடந்த 16, வருடங்களாக எந்த ஒரு நினைவு தினத்தையும் ஈழத்தமிழர்கள் அனுசரித்த வரலாறுகள் இல்லை என்பதையே கடந்த 16, வருடங்களாக ஈழத் தமிழர்கள் நிருப் பித்துள்ளனர்.

• • •

## இந்தியாவில் ... தொடர்ச்சி ...

இந்த சம்பவம் குறித்து ரஷ்யாவும் மிகுந்த எச்சரிக்கையை வெளிப்படுத்தியுள்ளது, மேலும் பயங்கரவாத அச்சுறுத்தலை திறம்பட எதிர்கொள்வதில் சர்வதேச சமூகத்தின் ஒற்றுமையை வலியுறுத்தியுள்ளது.

செங்கோட்டை அருகே வெடித்த காரில் இருந்து கண்டெடுக்கப்பட்ட மாதிரிகள், அருகிலுள்ள ஃபரிதாபாத்தில் உள்ள அல் ஃபலா பல்கலைக்கழகத்தின் மூத்த மருத்துவர் உமர் முகமதுவின் டிஎன்ஏ மாதிரிகளுடன் பொருந்தியதாக பாதுகாப்பு நிறுவனங்கள் நடத்திய சோதனைகள், என்டிடிவி செய்தி வெளியிட்டுள்ளது.

ஏப்ரலில் ஜம்மு-காஷ்மீரில் 26 பேர் கொல்லப்பட்டு, இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே மட்டுப்படுத்தப்பட்ட மோதலுக்கு வழிவகுத்த பயங்கரவாத தாக்குதல், அண்டை தெற்காசிய நாடுகளுக்கு இடையே பதட்டங்களை அதிகரித்துள்ளது. திங்கட்கிழமை நடந்த தாக்குதலுக்கு இஸ்லாமாபாத்தை புது தில்லி குற்றம் சாட்டவில்லை.

LENIO
Architectural Planning | Structural Design | Party Wall Agreement
Sadadcharam Easwaran (Easan)
BEng MSc DIC CEng C.BuildE MICE MCABE MFPWS
Director
+44 (0) 20 4558 8272
+44 (0) 7831 199 962
easan@leniogroup.com
www.leniogroup.com
5a St. James's Road
Croydon, CR0 2SB
ice cabe FPWS

JR Print
www.jrprint.com
WhatsApp 07939 998730
61, Hoe Street, Walthamstow
London E17 4SA
Email:jrprintuk@gmail.com
Fast, Relaible & Friendly Service
Guaranteed Delivery Within 72 Hours In Europe at Minimal Cost
Call For Free Guatation

## அநுரவின் பட்ஜட் ... தொடர்ச்சி ...

திடீரென்று எவ் வாறு வரவு,செலவுத்திட்ட விடயத்தில் மாத்திரம் கூட்டுமுடிவு எடுக்கப்பட்டது.

உண்மையில், தமிழ்த் தேசிய உணர்வாளர்களும், தமிழரசுக்கட்சியின் கொள்கைப்பற்று ஆதரவாளர்களும் வெட்கித்தலைகுனிய வேண் டிய நிலைமை. ஏனென்றால் தனிப்பட்டநலன்களுக்குள் தான் தமிழ் மக்களின் தேசியமும், கொள்கைப் பற்றும், உணர்வுகளும் சிக்கவைக்கப்பட்டுள்ளன.

ஆம், சிவஞானம் சிறிதரனைப் பொறுத்த வரையில் அரசாங்கத்தின் பிடிக்குள் சிக்கியுள்ளார். ஜனாதிபதி அநுரகுமார பதவிக்குவந்து சொற்ப நாட்களில் அவரை தனிப்பட்ட ரீதியில் சந்தித்து உரையாடினார். அதன் பின்னர் தற்போது வரையில் மதுபானசாலை அனுமதிப்பத்திர பட்டியல் வெளியாகியிருக்கவில்லை.

அடுத்து அவருக்கு எதிராக சொத்துக் குவிப்பு தொடர்பான முறைப்பாடு தென்னிலங்கை அமைப்பால் செய்யப்பட்டது. ஆனால் தற்போது வரையில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. இந்த நிலைமைகள் 'பின்கதவு' உறவுகளை மிகத்தெளிவாக வெளிப்படுத்துகின்றன. ஆகவே கட்சி நடுநிலை முடிவை எடுப்பதாக கூறும்போது சிறிதரனுக்கு பழம் நழுவிப் பாலில் விழுவதற்கு ஒப்பானதாகவே இருந்திருக்கும்.

அடுத்து, சாணக்கியன், அவருடைய கடந்தகால அரசியல் வரலாறு, ராஜபக்ஷக்களுடனான பங்காளித்துவத்தையே கொண்டிருந்தது. அண்மைக்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் குற்றப்புலனாய்வுப் பிரிவு நிதி முறைகேடுகள், கேள்வி மனுக்கோரல் முறைகேடுகள், சொத்துக் குவிப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட கிழக்குமாகாண அரசியல்வாதிகளின் பட்டியலை தயாரித்திருக்கிறார்கள்.

குறித்த பட்டியலில் சாணக்கியனின் பெயரும் இடம்பெற்றிருக்கின்றது. இதன் பின்னரே, அநுரவை தனியாகச் சந்தித்து உரையாடினார். அச்சந்திப்பின் காரணம் மிகத்தெளிவாக இருந்த போதும் தமிழர்களின் பிரச்சினை பற்றிப் பேச நேரம் கோருவதற்காக சந்தித்ததாக பொதுவெளியில் கூறியிருந்தார்.

அடுத்ததாக, எம்.ஏ.சுமந்திரன் அநுரவின் மீது மென்போக்கு நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதற்குக் காரணம், தனது தலைமையில் உரு வாக்கப்பட்ட 'ஏக்கிய இராச்சிய' புதிய அரசியலமைப்பை முன்னெடுத்துச் செல்வதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பச்சைக்கொடி காட்டியிருப்பது தான். சுமந்திரனைப் பொறுத்த வரையில் அமெரிக்காவும், மேற்குலமும் புதிய அரசியலமைப்புக்கான உருவாக்கத்துக்காக பெருந்தொகை நிதியை செலவிட்டுள்ளன.

அத்தரப்புக்கள் தாம் செலவழித்த நிதிக்காக அறுவடையை எதிர்பார்க்கின்றார்கள். அந்த அறுவடையை எப்படியாவது பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் சுமந்திரன் இருக்கின்றார். ஆகவே தான் சுமந்திரன் 'ஏக்கிய இராச்சிய' புதிய அரசியலமைப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று விரும்புகின்றார். அத்தோடு அது தன்னால் வரையப்பட்டது என்று மார்பு தட்டிக்கொள்ள முடியும். அதன்மூலம் இழந்த செல்வாக்கை மீளப்பெற முடியும் என்பது அவருடைய அரசியல் கணக்காக உள்ளது.

அதுபோலத்தான், வைத்தியர் சத்தியலிங்கம், கோடீஸ்வரன் போன்றவர்களின் கடந்தகால நிதி விவகாரங்களும் சார்ச்சைக்குரியவையாக உள்ளன. குகதாசன், வைத்தியர் ஸ்ரீநாத், ரவிகரன் போன்றவர்கள் கட்சியின் தீர்மானத்தை எதிர்த்து தர்க்கம் செய்வதற்கான இயலுமை அற்றவர்கள்.

இத்தகைய நிலைமைகளில் தான் இலங்கைத் தமிழரசுக்கட்சி 'நடுநிலை' முடிவை எடுத்திருக்கின்றது. அதுவொரு தனிப்பட்ட ரீதியில் இருக்கும்சிக்கல்களைத்தீர்ப்பதைமையப்படுத்திய முடிவு தான். தவிர, தர்க்கரீதியாகவோ அல்லது தமிழ் மக்களின் நலன்களை மையப்படுத்தியோ எடுக்கப்பட்ட அர்த்தபூர்வமான, மூலோபாய ரீதியான முடிவாக அர்த்தம் கற்பிக்க முடியாது.

அரசியல் ரீதியில் பலமானதொரு அரசாங்கத்துக்கு எதிராக, தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கப்பதற்கு 'எதிர்ப்பு' என்பதே கையிலுள்ள ஒரே ஆயும். அந்த ஆயுதத்தை பயன்படுத்தாமல், மீண்டும் 'நல்லெண்ண சமிக்ஞை' என்ற பெயரில் 'நடுநிலை' வகிப்பது, வரலாற்றுத் தவறுகளைத் திரும்பச் செய்வதாகவே அமைகிறது என்பதற்கு அப்பால் தமிழ்த் தேசியத்தை நீர்த்துப்போகச் செய்யும் தற்குறிச் செயற்பாடு தான்.

இதன்விளைவுகளை அடுத்துவரும் சொற்பகாலத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சி மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய இனமும் அனுபவிக்கும். ஏனென்றால், தேசிய மக்கள் சக்தி தமிழ்த் தேசிய அரசியலை உறைநிலைக்கு கொண்டு செல்வது என்பதைத் திட்டமிட்டு பல நாட்களாகிவிட்டது

• • •

## போருக்கு ... தொடர்ச்சி ...

வதற்காக போர் பயிற்சிகளை நடத்த நிலம், வான், கடற்படை மற்றும் ரிசர்வ் படைகள் உத்தர விடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

'USS ஜெரால்ட் ஆர். ஃபோர்டு' என்ற விமானம் தாங்கி கப்பலும் அதனுடன் இணைந்த மூன்று போர்க்கப்பல்களும் அமெரிக்க தெற்கு கட்டளையால் மேற்பார்வையிடப்பட்ட பகுதிக்குள் நுழைந்ததாக அமெரிக்க கடற்படை கூறிய சிறிது நேரத்திலேயே இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

அமெரிக்க கடற்படையின் மிகப்பெரிய மற்றும் மிகவும் நவீனமான கேரியரான 'ஃபோர்டு', சுமார் 4,000 மாலுமிகளுடன், "போதைப்பொருள் கடத்தலைத் தடுக்கும்" ஒரு பணியின் ஒரு பகுதியாக ஐரோப்பிய கடல் பகுதியிலிருந்து லத்தீன் அமெரிக்காவிற்கு மீண்டும் அனுப்பப்பட்டுள்ளது. அதன் வருகை பரந்த கரீபியன் பிராந்தியத்தில் அமெரிக்க இராணுவ இருப்பை சுமார் 15,000 ஆக உயர்த்தியுள்ளது.

வெனிசுலா "போதைப்பொருள் பயங்கரவாதிகளுக்கு" உதவுவதாக பலமுறை குற்றம் சாட்டிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், கடந்த மாதம் அப்பகுதியில் கடற்படை ஆர்மடாவை அனுப்ப உத்தரவிட்டார், மேலும் தென் அமெரிக்க நாட்டின் மண்ணில் தாக்குதல்களை அங்கீகரிக்க முடியும் என்றும் சூசக மாகக் கூறியுள்ளார். செப்டம்பர் முதல், அமெரிக்க இராணுவம் சர்வதேச நீர்நிலைகளில் போதைப் பொருள் கடத்தல்காரர்களால் பயன்படுத்தப் பட்டதாகக் கூறும் சிறிய கப்பல்கள் மீது குறைந்தது 19 தாக்குதல்களை நடத்தியுள்ளது, இதனால் 70 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ போதைப்பொருள் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார், தொடர்ச்சியான இராணுவக் குவிப்புக்கு மத்தியில் வாஷிங்டன் "ஒரு புதிய போரை இட்டுக்கட்டுவதாக" குற்றம் சாட்டியுள்ளார். போதைப்பொருள் கடத்தல் கதையை ஒரு சாத்தியமான ஆட்சி மாற்ற நடவடிக்கைக்கு ஒரு சாக்காக வாஷிங்டன் பயன்படுத்துவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

நாட்டின் பதில் எந்தவொரு சாத்தியமான அமெரிக்க வான் அல்லது தரைவழி தாக்குதலையும் எதிர்க்க கெரில்லா பாணி தந்திரோபாயங்களைப் பயன்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளதை வெனிசுலாவின் திட்டமிடல் ஆவணங்கள் காட்டுகின்றன.

## தன்சானியாவில் ... தொடர்ச்சி ...

தீனவிசாரணை நடத்த வேண்டும் என்றும், காணாமல் போன வர்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்றும், கொல்லப் பட்டவர்களின் உடல்களை அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அவர் அதிகாரி களை வலியுறுத்தியுள்ளார்.

அக்டோபர் 29 தேர்தலுக்குப் பிறகு தான் சானியா முழுவதும் வன் முறை போராட்டங்கள் வெடித்தன, அதில் ஜனாதிபதி சாமியா சுலுஹு ஹாசன் சுமார் 97% வாக்குகளுடன் வெற்றி பெற்றார்.

தேசத்துரோக குற்றச்சாட்டில் பல மாதங்களாக காவலில் வைக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சி சடேமா கட்சியின் தலைவர் துண்டு லிசு உட்பட ஹசனின் இரண்டு முக்கிய போட்டியாளர்களின் தகுதி நீக்கத்தால் ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகியிருந்தன.

தான்சானியாவின் 31 பிராந்தியங்களில் எட்டு இடங்களில் நடந்த தேர்தல்களுக்குப் பிறகு காவல்துறை மற்றும் அடையாளம் தெரியாத பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்ட 1,000 பேர் பற்றிய அறிக்கைகளை கட்சி சேகரித்துள்ளதாக சடேமாவின் செய்தித் தொடர்பாளர் ஜான் கிடோகா கூறியதாகக் கூறப்படுகிறது. அரச அதிகாரிகள் இறப்புகளை ஒப்புக்கொண்டனர், ஆனால் எதிர்க்கட்சி புள்ளிவிவரங்களை மிகைப் படுத்தப்பட்டதாக நிராகரித்துள்ளனர்.

## தமிழ் முஸ்லீம் .. . தொடர்ச்சி ...

அரசியல் நோக்கை நோக்கிச் செல்லவேண்டும். அதுவே ஈழத் தமிழர் சமூகத்திற்கும், இஸ்லாமியர் சமூகத்திற்கும் உண்மையான விடுதலைக்கான பாதை.

## கசநோயால் ... தொடர்ச்சி ...

முறை. 2024 ஆம் ஆண்டில், 8.3 மில்லியன் மக்கள் காசநோய் சிகிச்சையை பெற்றுள்ளனர், அதே நேரத்தில் சிகிச்சையின் வெற்றி விகிதங்கள் 68 இலிருந்து 71 சதவீதமாக உயர்ந்துள்ளது.

இருப்பினும், மருத்துவ உதவி பற்றாக் குறை காரணமாக நோயைக் கையாள்வதில் சமீபத்திய முன்னேற்றம் நெருக்கடியை சந்தித்துள்ளது . இது "கடினமாகப் பெற்ற நன்மையை மாற்றியமைக்கக்கூடும்" "காசநோய் தடுக்கக்கூடியதாகவும் குணப்படுத்தக் கூடியதாகவும் இருந்தபோதிலும், ஒவ்வொரு ஆண்டும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான உயிர்களைக் கொல்வது மனசாட்சிக்கு அப் பாற்பட்டது" என WHO தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு, தடுப்பு, நோயறிதல் மற்றும் சிகிச்சைக்காக $5.9 பில்லியன் ஒதுக்கப்பட்டது, இது 2027 ஆம் ஆண்டுக்குள் ஆண்டு இலக்கான $22 பில்லியனை விட மிகக் குறைவு.

2024 இல் காசநோய் இறப்புகள் 2015 இல் ப திவு செய்யப்பட்டதை விட 29 சதவீதம் குறைவாக இருந்தபோதிலும், இந்த எண்ணிக் கையை 2025 ஆம் ஆண்டில் 75 சதவீதமாகவும் 2030 ஆம் ஆண்டில் 90 சதவீதமாகவும் குறைக்க முடியும் என நம்பப்பட்டது.

எதிர்வரும் ஆண்டுகளில் இறப்புகளின் எண்ணிக்கை கூட அதிகரிக்கக்கூடும். "சர்வதேச நன்கொடையாளர் நிதியில் நீண்டகால வெட்டுக்கள் கூடுதல் இறப்புகளுக்கும் 10 மில்லியன் மக்கள் காசநோயால் பாதிக்கப்படுவதற்கும் வழிவகுக்கும்" என்று காசநோய் தொற்றுகளுக்கான இயக்குனர் தெரேசா கசேவா எச்சரித்துள்ளார்.

ஜனவரி மாதம் அமெரிக்கா அதிலிருந்து விலகியபோது அந்த நிறுவனம் குறிப்பிடத்தக்க நிதி இழப்பை சந்தித்தது.

## தொல்பொருள் . .. தொடர்ச்சி ...

மக்கள் சக்தி அரசு “நாம் இலங்கையர்” என்ற பதாகையை தொங்கவிட்டு அதில் தமிழர்களையும், முஸ்லிம்களையும் அழைப்பது எந்தவகையில் பொருந்தும்.

குறிப்பாக ஈழத்தமிழர்கள் கடந்த 77 ஆண்டுகளாக நாம் இலங்கையர் இல்லை என்ற நிலைப்பாட்டுக்கே கடந்த சிங்களத் தலைவர்கள் ஆட்சி செய்துள்ளனர். ஈழத்தமிழர்களுக்கு கைவிலங்கிட்டு அடிமைகளாக்கி உள்ளனர். அடிமை விலங்கை உடைக்கவே அகிம்சை ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் போராடி தற்போது சர்வதேசம் நோக்கி இராஜதந்திர போராட்டத்தில் ஈழத்தமிழர்கள் இணைந்துள்ளனர்.

அரசியல் தீர்வை வழங்காமல் இராணுவ அடக்குமுறைகளை நிறுத்தாமல் களியாட்ட விழாவுக்கு “நாம் இலங்கையர்” என கூறி வடகிழக்கு தமிழர்களை அழைத்து படம் காட்டி ஊடகத்தில்பிரசுரிப்பதால்மட்டும்நாம்இலங்கையராகி விட முடியாது. “நாம் ஈழத்தமிழர்” என்ற உணர்வுடனேயே ஈழத்தமிழர்கள் இலங்கையிலும் புலம்பெயர் தேசங்களிலும் வாழ்கிறார்கள்.

தேசியமக்கள்சக்திஅரசில்எண்ணக்கருவில் உள்ள சமதர்ம சமூகம் உருவாக வேண்டுமானால் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு சமஷ்டி அடிப்படையில் வழங்கினால் மட்டுமே இனத்துவ முரன்பாட்டுக்குள் சிக்கித் தவிக்கும் தமிழ்த்தேசிய இனம் அதன் அபிலாசைகள்,ஏக்கங்கள் தீரும் என்பதை திசைகாட்டி அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த 3 தசாப்தங்களாக அதனை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை. இனியாவது ஜனாதிபதி அனுரவின் தலைமையில் ஆட்சிசெய்யும் அரசாங்கம் புரிந்து கொள்வேண்டும். முக்கியமாக வடக்கு கிழக்கில் இருந்து தேசிய மக்கள் சக்தியில் தெரிவான 07 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதனை உணரவேண்டும்

கடந்த கால அரசாங்கங்கள், வடக்கு கிழக்கு தாயகத்தில் நில அபகரிப்பு, ஆக்கிரமிப்பு, கலாசார மேலாதிக்கம் என்பற்றை நிறைவேற்ற தொல்பொருள் திணைக்களத்தையே கருவியாக பயன்படுத்தினர் என்ற நிலைப்பாடு தமிழ்பேசும் மக்களிடையே ஆழ ஊடுருவியிருக்கிறது.

அவ்வாறான சூழலில் தொல்பொருள் குழுவில் இன அடிப்படையில் நாம் எவரையும் நியமிக்கவில்லை என்ற தத்துவத்தை மீண்டும் இனவாத அரசாக திசைகாட்டி அரசு நிருபித்து விட்டது.இந்த 19, பேரையும் நியமித்த பின்னர் யாரும் எதிர்த்தால் சாட்டுக்காக தவறை ஏற்று குழுவின் இனி 19 உடன் 21 ஆக தமிழர் ஒருவரையும், முஸ்லிம் ஒருவரையும் நியமித்து சரி செய்தாலும் இந்த அரசின் உள்நோக்கத்தை அனைவரும் புரியலாம் இவ்வாறு சிலவேளை நியமித்தாலும் அது காலம் கடந்த ஞானமாகவே கருதப்படும்.

உண்மையில் இவ்வாறான தொல்பொருள் ஆய்வுக்கு குழு அமைப்பதானால் சிங்களவர் 10 பேரும் தமிழர் 06 பேரும் முஸ்லிம் 03 பேரும் இடம் பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறு பெயர்கள் இடம் பெற்றிருப்பின் இந்த குழுவை எவரும் விமர்சிக்க முடியாது ஆனால் இந்த குழு முழுக்க முழுக்க தொல்பொருள் ஆய்வு ஆலோசனைக்குழு என்பதை சிங்கள பௌத்த ஆலோசனைக்குழுவாகவே நோக்கவேண்டியுள்ளது.

• • •

## தியாகத்தின் ... தொடர்ச்சி ...

மண்ணை அலங்கரித்த மாவீரர்களின் மன நிலையையும், நிதானம் தவறாத போக்கையும், நாம் உணர முடிகிறது. ஆர்ப்பாட்டமோ, ஆரவாரமோ இல்லாமல், இலக்கை மட்டுமே நோக்கிப் பயணித்தவர்கள் விடுதலைப்புலி வீரர்கள்.

விடுதலை ஒன்றுதான் அவர்களது இலக்காயிருந்தது. கண்ணைக் கட்டுகிற இருளில், அடுத்து என்ன என்கிற குழப்பத்தில், பிரபாகரன் அவர்களுக்குள் விதைத்திருந்த நெறிமுறைகள் விளக்காயிருந்தது. அதனால்தான், அவர்களது ஒவ்வொரு தோல்வியும் வெற்றியில் முடிந்தது. அதற்கான எடுத்துக்காட்டு, ஆனையிறவு.

ஆனையிறவு களத்தில் தோல்வியடைந்த போதும், ‘எழுதுங்களேன்... நாங்கள் எழுதாது போன கவிதையை யாராவது எழுதுங்களேன்’ - என்று கம்பீரமாகக் குரல் கொடுத்தவள் எங்கள் சகோதரி வானதி.

தாய் மண்ணுக்காகத் தன்னுயிரைத் தியாகம் செய்த மாவீரர்களின் பட்டியல், மில்லர்கள், வானதிகள், அங்கயற்கண்ணிகள் என்று பல்லாயிரக்கணக்கில் நீண்டு கொண்டே போகிறது.

‘தாயகக் கனவுடன் சாவினைத் தழுதிய சந்தனப் பேழைகளே’ என்கிற மகாகவிஞன் புதுவையின் பாடல், அந்த மாவீரர்களின் கல்லறைக்குள் நுழைந்து அவர்களது செவிகளைத் தழுவும் போதெல்லாம், ‘நாங்கள் எழுதாது போன கவிதையை யாராவது எழுதுங்களேன்’ என்கிற வானதியின் குரல் உயிர்த்திருக்கிற நம் ஒவ்வொருவருடைய செவியையும் கிழிக்க வேண்டும் -என்று எதிர்பார்க்கிறேன் நான்.

ஒன்றரை லட்சம் உயிர்களை முள்ளி வாய்க்காலில் தொலைத்த பின்னும்,

*வாயிருந்தும் ஊமையாய்*
*கண்ணிருந்தும் குருடராய்*
*காதிருந்தும் செவிடராய்*

இருந்தோமென்றால், உயிர் இருந்தும் உணர்வில்லாத பிரேதமாய்த்தான் மதிப்பிடப் படுவோம், நாம் ஒவ்வொருவரும்! இப்படியாரு ஈன வாழ்க்கைக்காக, அடுத்த தலைமுறை நம்மை மன்னிக்கவே மன்னிக்காது.

மாவீரர்களைக் கொண்டாடுகிற ஒவ்வொரு நிமிடமும், அவர்களை வணங்குகிற ஒவ்வொரு நொடியும், அவர்கள் எதற்காகச் செத்து மடிந்தார்களோ, அதற்காக நாம் என்ன செய்திருக்கிறோம் என்கிற கேள்வி நம்மைத் துளைக்க வேண்டும். அவர்கள் எழுதாது போன தமிழீழம் என்கிற விதையை எழுதி முடிக்கிற கடமையை நாம் ஒவ்வொருவரும் நம் தோளில் சுய விருப்பத்துடன் தாங்கிக் கொள்வதுதான், அந்த மாவீரர்களுக்குச் செலுத்துகிற உண்மையான அஞ்சலி.

அந்தக் கடமையை நாம் நிறைவேற்றுகிற போதுதான், வெந்து தணிந்த அந்த மாவீரர் களின் நெஞ்சத்து நெருப்பு குளிர்ச்சியடையும்.

*நாமார்க்கும் குடியல்லோம்*
*நமனை அஞ்சோம்*

என்கிற ஓர்மத்தோடு அவர்கள் நடமாடிய வீரத்தின் விளைநிலத்தை விடுதலைக் காற்று தழுவுகிற நொடியில்தான், இந்த பூமிப்பந் தில் தனித்ததோர் அடையாளத்தோடும், அங்கீகாரத்தோடும் தமிழினம் தலைநிமிர்ந்து நடக்க முடியும்!

• • •




## படைவலுச் சம .. . தொடர்ச்சி ...

மீதான பொருளாதார அழுத்தமும் காரணம். இந்த ஆண்டு இந்தியாவின் பொருளாதாரம் 7% வளர்ச்சியடையும் என்று மதிப்பீட்டு நிறுவனமான மூடிஸ் அதன் குளோபல் மேக்ரோ அவுட்லுக் அறிக்கையில் வியாழக்கிழமை(13) தெரிவித்துள்ளது.

அதாவது வாஷிங்டன் இந்தியா மீது விதித்த செங்குத்தான 50% வரிகள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. “சில பொருட்களுக்கு 50% அமெரிக்க வரிகளை எதிர்கொள்ளும் இந்திய ஏற்றுமதியாளர்கள், ஏற்றுமதிகளை வேறு நாடுகளுக்கு திருப்பிவிடுவதில் வெற்றி பெற்றுள்ளனர், செப்டம்பர் மாதத்தில் அதன் ஒட்டுமொத்த ஏற்றுமதிகள் 6.75% அதிகரித்துள்ளன, ஆனால் அமெரிக்காவிற்கான ஏற்றுமதி 11.9% குறைந்துள்ளது” என்று மூடிஸ் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதாவது தற்போது அமெரிக்காவில் இழந்த ஏற்றுமதிகளுக்கான மாற்று வழிகள் இந்தியாவுக்கு தேவை, அதனை ஏனைய ஆசிய, ஆபிரிக்க, அரபு, லத்தின் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தான் தேட முடியும்.

அது தான் இந்திய பொருளாதாரத்தை தாங்கிப் பிடிக்கும், இல்லையெனில் இந்திய பொருளாதாரத்தின் சரிவு அதன் படைத்துறை மற்றும் பிராந்திய மேலாண்மைகளில் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தும். எனவே சமூகவலைத்தள போராளிகளை நம்பி மீண்டும் களமிறங்கி ஒட்டுமொத்த இந்தியாவையும் அழிக்க மோடியின் பாதுகாப்பு ஆலோசகர்கள் இந்த முறை விரும்பவில்லை, கடந்த ஏப்பிரல் மாதம் காஸ்மீரில் இடம்பெற்ற தாக்குதலும் இந்தியாவுக்கு வைக்கப்பட்ட பொறியாகவே இந்திய பாதுகாப்பு ஆசேலாசகர்கள் 6 விமானங்களை இழந்த பின்னர் உணர்ந்து கொண்டனர்.

எனவே தான் இந்த பொறியில் அவர்கள் அகப்பட விரும்பவில்லை, செங்கோட்டை தாக்குதலுக்கு பாகிஸ்த்தான் தான் காரணம் என்று கூறினால் உள்ளூரில் பதிலடிக்கான எதிர்பார்ப்புக்கள் அதிகமாகும் என்பதால் இந்தியாவுக்கு எதிரான விரோத சக்திகள் என்று குண்டுவெடிப்புக்கான காரணம் அடித்து மூடப்பட்டுள்ளது. அதாவது பாகிஸ்தான்- இந்திய போர் தென்னாசியப் பிராந்தியத்தின் படைவலுச் சமநிலையை மாற்றியமைத்துள்ளது என்று நாம் அன்று கூறியதை செங்கோட்டை உறுதிப்படுத்தியுள்ளது.

• • •

## பாதீட்டில் தோட் . . . தொடர்ச்சி . . .

தனியார் துறையில் பணிபுரிபவர்களுக்கு அரசின் நிதி வருவாயைப் பயன்படுத்த முடியாது என்பதால் இந்த முன்மொழிவு அரசாங்கத்துக்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. அதற்கமைய, பாராளுமன்றத்தின் அரசாங்க நிதி பற்றிய குழு, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவால் அறிவிக்கப்பட்ட இந்த பாதீட்டு முன்மொழிவின் சட்டரீதியான தாக்கங்கள் குறித்து விவாதித் துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி குறித்த குழு அரசாங்கத்தின் முன்மொழிவை விவாதித்து, தனியார் பெருந் தோட்ட நிறுவனங்களால் பணியமர்த்தப் பட்ட பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு அர சாங்கம் இந்த கொடுப்பனவை வழங்குவது சட்டவிரோதமானது என்ற முடிவுக்கு வந்துள் ளது. இந்தநிலையில் பாதீட்டு விவாதத்தின் போது இது குறித்து விரிவாகப் பேசப்படும் என்று குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரி வித்தார்.

அரசாங்க நிதி பற்றிய குழு என்பது பாராளுமன்றத்தின் மிக சக்திவாய்ந்த மேற் பார்வைக் குழுக்களில் ஒன்றாகும். இது அரச நிதிகளை அரசாங்கம் திரட்டுவது மற்றும் செலவிடுவது ஆகியவற்றைக் கண்காணிக்கும் முக்கியப் பணியைக் கொண்டுள்ளது. எதிர்க்கட்சி உறுப்பினரே இதன் தலைவராக இருப்பது, அரச நிதி நிர்வாகத்தின் வெளிப்படை தன்மையை உறுதி செய்கிறது.

இந்த நிலையில் பெருந்தோட்ட தொழி லாளர்களுக்கான ஒதுக்கீடு சட்ட விரோதமா னது என்று குறித்த குழு தீர்மானித்துள்ளது. இதே வேளை இந்த விடயம் தொடர்பில் பாரா ளுமன்றில் உரையாற்றிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு வேதனஉயர்வுவழங்கமாற்றுவழியைஅரசாங்கம் கண்டறிய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். அரசாங்கம் தற்போது மேற்கொண்டுள்ள ஒதுக்கீடு சட்டரீதியானதா? என்ற சந்தேகம் தனக்கு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான வேத னத்தை அதிகரிப்பதற்காக அரசாங்கம் தனியார் வியாபாரிக்கு பணம் கொடுப்பதாகவும் நாமல் ராஜபக்ஷ குற்றம்சாட்டினார்.

**அரசாங்கத்தின் விளக்கம்**

இந்த விடயம் தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதம் இடம்பெற்றபோது விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தமது நிலைப்பாட்டை முன்வைத்தார். வேதன அதிகரிப்பு தொடர்பில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக பெருந்தோட்டத்துறை அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்துள்ளார்.

தொழிலாளர் களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் திட்ட மிட்டுள்ள 200 ரூபாய் நிதியை இடை நிறுத்துவதற்கு, சிலர் சதித்திட்டம் தீட்டு வதாக அமைச்சர் தெரிவித்தார். அரச நிதியை தனியார் துறையினருக்கு எவ்வாறு வழங்குவது? என்ற அடிப்படையில் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் வழங்க எதிர்பார்க்கும் சலுகையை இல்லாது செய்யும் வகையில், அந்த முயற்சி மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் தெரிவித் துள்ளார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஊட் டச்சத்துக் குறைபாட்டினால் அதிகம் பாதிக்கப் பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், கடந்த காலங்களில் பெருந்தோட்டத் துறையினரின் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக, வெளிநாடு களினூடாக கிடைத்த நிதியை , ஆட்சியாளர்களு க்கு நெருங்கிய நிறுவனங்களுக்குப் பகிர்ந் தளித்துள்ளதாகவும் குற்றஞ்சாட்டினார்.

முன்னர் ஆட்சி நடத்திய பச்சை, நீல ஆட்சியாளர்களின் காலத்திலும் இதே நிலையே பேணப்பட்டதாக அவர் குறிப்பிட் டார். இதன்போது குறுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், தொழிலாளர்களு க்கு 200 ரூபாய் வேதன அதிகரிப்பு செய்வதற்கு எவ்வித தடையும் இல்லை எனவும், எனினும் அதில் சட்டச் சிக்கல்கள் காணப்பட்டால் அதனை நிவர்த்திக்க வேண்டியது அவசியம் எனவும் குறிப்பிட்டார்.

மனோ கணேசனின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அமைச்சர் சமந்த வித்தியாரத்ன, அவ்வாறான சட்டச் சிக்கல்கள் ஏற்பட்டால் அதனை அரசாங்கம் உரிய முறையில் நிவர்த்திக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். அதே நேரம் இந்த விடயம் தொடர்பில் அமைச் சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலும் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த அமைச்சரவை பேச் சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ, நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தருபவர்களுக்கு ஒரு உபகாரமாகவே அவர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்குவதற்கு அரசாங்கம் முன்வந்துள்ளதாக தெரிவித்துள்ளார். நாட்டின் பொருளாதாரத்தில் பங்களிப்பு செய்கின்ற விவ சாயிகளுக்கு உரமானியம் வழங்கப்படு கிறது. தங்களது உற்பத்திகளை அதிகரிப் பதற்கு அவர்களுக்கு வழங்கப்படும் இந்த மானி யத்தை போலவே பெருந்தோட்ட தொழிலா ளர்களுக்கும் வழங்கப்படும். இதனூடாக அவர்களது வருகை அதிகரித்து, அவர்களது உற்பத்தி அதிகரிக்குமாயின், நாட்டுக்கே அதிகளவில் நன்மை கிடைக்கும் என்று தெரிவித்தார். பெருந்தோட்ட நிறுவனங்களும் வேதன அதிகரிப்பு தொடர்பில் தீர்மான மொன்றை எடுக்கவேண்டும்.

உரிய இலக்குகளை அடையப்படவில்லை யாயின் பெருந்தோட்டங் களை மீள அரசின் வசமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தருவோர் அவர்களுக்கு நியாயம் கிடைக்க செய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

அரசதுறையா, தனியார்துறையா, சுய தொழிலாளர்களா என்று பாராமல், நாட்டின் பொருளாதாரத்துக்கு எந்த பகுதியிலிருந்தேனும் பங்களி ப்பு செய்பவர்களுக்கு உதவ வேண்டிய தும் நிவாரணம் அளிக்க வேண்டியதும் அரசாங்கத் தின் முக்கிய பொறுப்பாகும். சில தனியார் துறைக்கு அரசாங்கம் வேதனத்தில் பங்களிப்பு செய்யாவிட்டாலும், உட்கட்டமைப்பு வசதி களை வழங்குகிறது. அதேநேரம், பெருந்தோட்ட தொழிலாளர்களும் இந்த நாட்டில் வரி செலுத்து பவர்கள் என்றும் அவர்களுக்காக அரச நிதியை செலவிடுவதில் எந்த பிரச்சி னை யும் இல்லை என்றும் அமைச்ச ரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

• • •

## கிவுல் ஓயா . . . தொடர்ச்சி . . .

டோடைக் குளம், ஒயாமடுக்குளம், வெள்ளான் குளம், பெரிய கட்டுக் குளம், பனிக்கல் மடுக் குளம், சன்னமுற்றமடுக்குளம், கம் மாஞ்சிக்குளம், குறிஞ்சாக்குளம், புலிக் குட்டிக் குளம், திரிவைச்சகுளம் முதலான சிறிய நீர்ப்பா சனக்குளங்களும், வெடிவைச் சகல்லு குளத் தின் கீழ்வரும் வயல்காணிகள் பகுதியளவிலும், நாவலர்பாம், கல்லாற்றுக்குளம், ஈச்சன்குளம், கூழாங்குளம் வயற் காணிகளும் வவுனியா வடக் கிலுள்ள பழந்தமிழ் கிராமங் களான காட்டுப் பூவரசங்குளம் கிராமம், காஞ்சூரமோட்டை கிராமம், மருதோடைக் கிராமத்தின் ஒருபகுதி உள்ளிட்ட பகுதிகள் குறித்த நீர்ப்பாசன அணைக் கட்டின் நீரேந்துப் பகுதிகளாக மாறும் அபாயம் ஏற்படும்.

இவ்வாறாக தமிழ்மக்களின் பூர்வீககுளங் களையும் அவற்றின்கீழான வயல்நிலங்களை யும், பழந்தமிழ் கிராமங்களையும் அபகரித்து செய்யப்படும் இவ்வாறான திட்டங்கள், கட்ட மைக்கப்பட்ட தமிழ் இனவழிப்புச்செயற்பாட் டின் வடிவமாகும். எனவே இந்தவிடயத்தில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். எனவே இத்தகைய கட்டமைக்கப்பட்ட தமிழ் இனவழிப்புச் செயற்பாட்டினை உடனடியாக நிறுத்துமாறும் இவ்வுயரிய சபையினைக் கோரு கின்றேன் - என்றார்.

## பயங்கரவாத . . . தொடர்ச்சி . . .

மாக உலகளவில் கருதப்படுகிறது.

சர்வ ஜன நீதி அமைப்பு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக இரத்து செய்ய வேண்டும் என்று தொடர்ந்து குரலெழுப்பி வருகிறது என்றும் அந்த அறிக்கை யில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக் கையும் அதை முழுமையாக நீக்குவதாக உறுதி யளிக் கிறது.

புதிய வரைவு சட்டமூலம் இந்த வாக்குறு தியை முழுமையாக பிரதிபலிக்கும் என்று நாங் கள் எதிர்பார்க்கின்றோம் என்றும் சர்வஜன நீதி அமைப்பு குறிப்பிட்டுள்ளது.




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்



